# பாடம் - 1. அமைப்பு
## பகுதி — ஆ

**1. அமைப்பை வரையறு ?**

ஆலன்லூயி அவர்களின் கருத்துப்படி " செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனைத் தொகுதிகளாகப் பிரித்தலும், குறிக்கோள்களை அடையப் பணியாளர்களை பயன்தரும் வகையில் உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தி பொறுப்புகளையும் ஆணைவுரிமைகளையும் வரையறுத்து வழங்குவதே அமைப்பு" ஆகும்.

**2. தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன?**

- உயர்மட்டத்திலுள்ள அதிகாரியிடமிருந்து கீழ்மட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் வரை ஆணையுரிமையின் வரிசை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். இதற்கு "கட்டளை இணைப்பு" என்று பெயர்.
- உயர் அலுவலர் கீழ்பணியாளருக்கு ஆணையுரிமை வழங்குகிறார். கீழ்பணியாளர் அப்பணியினை செய்து முடிக்கும் பொறுப்பை ஏற்கிறார்.

**3. கட்டுப்பாட்டு வீச்செல்லை என்றால் என்ன?**

- ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை குறிக்கும்.
- தனக்கு கீழ் பணியாற்றக் கூடிய பணியாளர்கள் அதிக அளவில் இருந்தால் சிறந்த முறையில் நிர்வாகிக்க முடியாது. எனவே நியாயமான எண்ணிக்கையில் இருக்க வேண்டும்.

**4. கட்டளையொருமை அல்லது ஒருமை உத்திரவு என்றால் என்ன?**

- ஒவ்வொரு பணியாளரும் ஒரு உயர் அதிகாரியிடமிருந்து ஆணைகளை பெற வேண்டும்.
- ஒரு பணியாளர் இரு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது குழப்பத்தையும், ஒழுங்கின்மையையும் ஏற்படுத்தும்.

**5. ஒருங்கிணைத்தல் என்றால் என்ன?**

- அமைப்பின் இலக்கினையடைய, அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.
- ஒவ்வொரு துறையின் பணிகளும் மற்ற துறைகளில் பணிகளுடன் கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

(எ.கா) ஒரு பண்டக சாலையில் இலாபம் பெற வேண்டும் என்றால் அதன் கொள்முதல் மற்றும் விற்பனை துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**6. தனி வணிக அமைப்பு என்றால் என்ன?**

- தனிநபரால் உருவாக்கப்பட்டு, மேலாண்மை செய்யும் வணிக அமைப்பிற்கு தனிவணிக அமைப்பு என்று பெயர்.
- தனி வணிகரே அனைத்து பணிகளையும் செய்கிறார். இத்தொழிலில் கிடைக்கும் இலாபம் முழுவதும் அவரையேச் சேரும். அதுபோல் நட்டம்முழுவதும் அவரே ஏற்க வேண்டும்.

**7. கூட்டாண்மை என்பதை விளக்குக**

- கூட்டாண்மை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே உறவு முறையை ஏற்படுத்தி தகுந்த ஒப்பந்தங்களின் மூலம் சட்டமுறை வியாபாரத்தை நடத்தி இலாபங்களை ஒப்புக் கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும்.

**8. கர்த்தா என்பவர் யார்?**

- இந்து கூட்டுக் குடும்ப வியாபார அமைப்பின் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர்.
- குடும்ப தலைவர் மூலம் வியாபாரத்தை நடத்துவர்.

**9. கூட்டுறவு அமைப்பு பற்றி நீ அறிவது என்ன?**

- கூட்டுறவு என்பது தாமாகவே அமைத்து கொள்ளும் நபர்களின் சங்கமாகும்.
- பொதுவாக ஒரே பொருளாதார நலனை கருதி உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஒன்று சேர்ந்து தன் விருப்பத்தின் பேரில் அமைக்கும் அமைப்பு ஆகும்.

- ஒரு நபர் ஒருவர்க்கு, மக்களாட்சி மேலாண்மை இதன் சிறப்பாகும்.

**10. பொது கூட்டுரு என்றால் என்ன?**

- பொதுக்கூட்டுரு பாராளுமன்றத்தில் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் அமைப்பு. இது சட்டமுறை கழகம் என்றும் அழைக்கப்படும்.
- தனிச்சட்டத்திலேயே இதனுடைய நோக்கம்அதிகாரங்கள், பணிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும் அரசின் நிதியுதவியுடன், சுயாட்சித் தன்மை கொண்டு செயல் படுகிறது. இதன் நோக்கம் பொதுமக்களுக்கு சேவை புரிவதாகும்.

(எ.கா) 1. இந்திய ரிசர்வு வங்கி, 2. யூனிட்டிரஸ்டு ஆப் இந்தியா, 3. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்.

**11. வாரிய அமைப்பின் பொருள் பற்றி கூறுக**

- வாரிய அமைப்பு தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.
- இதன் அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது.

(எ.கா) 1. தமிழ்நாடு மின்சார வாரியம், 2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 3. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

**12. பன்னாட்டு நிறுவம் என்றால் என்ன?**

- பன்னாட்டு நிறுவம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.

<u>இதன் சிறப்பியல்புகள் :</u>

1. ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்
2. மிகப்பெரிய அளவில் செயல்படும்.
3. அயல்நாடுகளில் உள்ள கச்சாப் பொருட்கள் பணியாட்கள், சந்தையைப் பயன்படுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவுகளை குறைத்தல்.

**13. பன்னாட்டு நிறுமங்களுக்கு எடுத்துக்காட்டு தருக.**

| | |
|---|---|
| 1. யூனிலீவர் லிமிடெட் | - பிரிட்டிஷ் நிறுமம் |
| 2. யூனியன் கார்பைடு | - அமெரிக்கா நிறுமம் |
| 3. பிலிப்ஸ் | - டச்சு நிறுமம் |
| 4. கோகோ கோயா கழகம் | - அமெரிக்கா நிறுமம் |

<u>பகுதி - இ</u>

**1. இந்து கூட்டுக் குடும்பம் பற்றி சிறுகுறிப்பு வரைக**

- இந்நியாவில் இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பு தலை சிறந்து விளங்குகிறது. இது இந்தியாவில் மட்டுமே உள்ளது.
- வியாபாரம் : வியாபாரம், கைத்தொழில்கள், சிறுதொழிற்ச் சாலைகள் போன்றவை.

**கூட்டுருவாக்கம் :**

- இந்து சட்டத்தின்படி இது கூட்டுருவாக்கப்பட்டு நடத்தப்படுகிறது.
- உறுப்பினர்களுக்கு எந்த ஒப்பந்தத்தின் மூலம் இது ஏற்படுவது இல்லை.
- இந்த வணிக அமைப்பு குடும்ப சொத்தில் உரிமையுள்ள வாரிசுதாரர்களால் நடத்தப்படுகிறது.
- குடும்பத்தலைவர் மூலம் இது நடத்தப்படுகிறது.
- குடும்ப தலைவருக்கு கர்த்தா என்றும், குடும்ப உறுப்பினர்களுக்கு வாரிதாரர் என்றும் பெயர்.

**இந்து சட்டம் :**

1. இந்து என்பவர் மூன்று தலைமுறையைச் சேர்ந்த வம்சாவழி சொத்து உரிமையர் ஆவார்.
2. மகன், மகள், மகனின் மகன், மகளின் மகன் அக்குடும்பத்தில் பிறந்தன் மூலம் குடும்ப சொத்தில் கூட்டு வாரிசுதாரர்களாக கருதப்படுகிறார்கள்.
3. இந்து கூட்டுக்குடும்பத்தில் பெண்களுக்கு சேர்ந்து வாழவும், திருமணம் செய்து கொள்ளவும் சட்டம் உரிமை வழங்கியுள்ளது.
4. 1956 - இந்து வாரிசு சட்டத்தின்படி ஒரு கூட்டு உரிமையர், அவர் மரணமடைந்தபின் அவரின் வாரிசுதாரர்கள் சொத்தில் உரிமையுள்ளவராகிறார்கள்.
5. 1986 - ம் ஆண்டிலிருந்து மகனைப் போலவே மகளுக்கும் சமஉரிமை வழங்கி வருகிறது.

**வரைவிலக்கணம் :**

- சட்டம் வரைவிலக்கணம் தரவில்லை. ஆனால் ஒரு வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பின்படி, இந்து கூட்டுக் குடும்பம் என்பது ஒரே இடத்தில் வசித்து வழிபாடு நடத்தி ஒரே வகையான உணவு வகைகளை உண்டு ஒரு குடும்பத்தின் உள்ள சொத்தில் பங்கேற்பவர்கள்.

**மிட்டக்சரா சட்டத்தின்படி,**

- ஒரு குடும்பத்திலுள்ள ஆண்வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள் .
- இச்சட்டம் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளம் தவிர இந்தியாவில் பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது.

**தாயபாகா சட்டத்தின்படி,**

- சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். இது பிறப்பின் காரணமாக அல்ல.
- கூட்டு வாரிசுதாரர் அவரது சொத்தின் பங்கை மற்ற கூட்டு வாரிசுதாரரின் சம்மதமின்றி மாற்றித்தர இயலும்.

**முடிவுரை :**

பேரளவு தொழிற்சாலைகள் தோன்றியபின் இந்த முறை வீழ்ச்சியடைந்துள்ளது.

**2. ஏதேனும் இரண்டு தனி நபர் வியாபார அமைப்பு பற்றி எழுதுக**

தனிநபர் வியாபார அமைப்புகள் : தனி நபராலோ அல்லது தனிநபர்களாலோ உருவாக்கப்படும் அமைப்பு.

**1. தனி வணிக நிறுவனங்கள் :**

- ஒருவரே உருவாக்கி, கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் வியாபார அமைப்பு தனி வணிகம் ஆகும். இது தொழிலமைப்புகளின் மிகப்பழமையான வடிவமாகும்.
- தானே முதலீடு செய்யலாம் அல்லது நண்பர்கள் உறவினர்களிடம் மற்றும் வங்கிகளிடம் கடன் பெற்று முதலீடு செய்யலாம்.
- வியாபாரத்தின் அனைத்து பணிகளையும் தனி வணிகரே மேற்கொள்கிறார்.
- தொழிலில் கிடைக்கும் இலாபம் மற்றும் நட்டம் தனிவணிகரைச் சாரும். எல்லாம் அவரே, அவரே எல்லாம்.

**2. கூட்டாண்மை**

- இருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களோ ஒருங்கிணைந்து தேவையான முதல், திறமையும் அளித்து நடத்தப்படும் வணிகம் கூட்டாண்மை ஆகும்.
- ஒப்பந்தத்தின் மூலம் தனிப்பட்ட இலாபங்களுக்காக நடத்தப்படுவது.
- குறைந்த பட்சம் இரு நபர்கள். அதிக பட்சம் வங்கித்தொழிலுக்கு 10 நபர்கள், பிற தொழில்களுக்கு 20 நபர்கள் வரை இருக்கலாம்.
- சட்டத்திற்கு உட்பட்ட தொழிலை நடத்த வேண்டும்.

**இலாபம்:**

- ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்வர். ஒப்பந்தம் எதுவும் இல்லையெனில் சமமாகப் பகிர்ந்து கொள்வர்.
- ஒவ்வொரு கூட்டாளியும் வியாபார மேலாண்மையில் பங்கு கொள்ள உரிமை உண்டு
- கூட்டாண்மையில் பங்கு கொண்ட நபர்களுக்கு கூட்டாளிகள் என்று அழைப்பர். கூட்டாளிகளின் அமைப்புக்கு நிறுவனம் என்று பெயர்.

**3. தனி வணிகரின் எல்லா குறைகளையும் கூட்டாண்மைகளைகிறதா?**

தனி வணிகரின் எல்லா குறைகளையும் கூட்டாண்மை களைவதில்லை. பின்வரும் குறைகளை களைகிறது.

**1. அளவானமுதல்**

- தனியாள் உரிமையாளரின் முதல் வரையறுக்கப்பட்டது. தனிநபரிடம் உள்ள நிதி ஆதாரங்கள் வியாபாரப் பெருக்கத்திற்கு போதுமானதாக இல்லை.
- ஆனால் கூட்டாண்மையில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் முதல் வழங்குவதால் தனிநபர் வணிகத்தைவிட அதிக முதல் திரட்ட வாய்ப்பு உள்ளது.

**2. சிறப்பு தேர்ச்சியின்மை :**

- தொழிலின் அனைத்துப்பணிகளையும் தனிவணிகர் ஒருவரே மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அனைத்து பணிகளையும் அவரால் திறம்பட செயல்படுத்த முடிவதில்லை.
- ஆனால் கூட்டாண்மையில் கூட்டாளிகளின் திறமைக்கேற்ப பணிகள் பகிர்ந்து அளிக்கப்படுவதால், அவர்கள் அப்பணிகளில் சிறப்பு தேர்ச்சி அடைந்து வியாபார வளர்ச்சிக்கும் அதிக இலாபம் ஈட்டவும் வழி வகுக்கிறது.

**3. கலந்து ஆலோசனையின்மை :**

- தனிவணிகர் தொழில் முடிவுகள் எடுக்கும்போது பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கிறார். அவரது முடிவு தவறானதாகி விட்டால், தொழிலிக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தும்.
- ஆனால் கூட்டாண்மையில் பலர் இருப்பதால் தொழில் பிரச்சனைகளை கலந்து சிறந்த முடிவுகளை எடுக்க முடியும்.

**4. இடர்பாட்டில் பங்கேற்காமை**

- தனிவணிகர் தொழிலில் ஏற்படும் இலாபம் முழுவதும் அவரையே சேருவது நட்டம் முழுவதும் அவர் ஒருவரே ஏற்கவேண்டும்.
- ஆனால் கூட்டாண்மையில் பலர் இருப்பதால் தொழில் ஏற்படும் நட்டத்தை கூட்டாளிகள் அனைவரும் பகிர்ந்து கொள்வார்கள்.

**4. எந்தக் காரணங்களுக்காக அமைப்பைப் பற்றி படிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது?**

- இலக்குகளை நிர்ணயித்தல், அவற்றை நிறைவேற்ற நடவக்கைகளை தொகுதிகளாகப் பிரித்தல், அவற்றை செயல்படுத்த ஒதுக்கீடு செய்தல், பின் அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்தல் ஆகியவை அமைப்பின் சிறப்புகள் ஆகும்.
- எனவே அமைப்பை பற்றி கீழ்காணும் காரணங்களுக்காக அறிந்து கொள்ள வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

1. அமைப்பு மனிதவாழ்வில் அனைத்து தருணங்களிலும் பரவி முக்கியத்துவம் பெற்றுள்ளது. பிறப்பு, கல்வி, தொழில் முறையே மருத்துவமனை , பள்ளி, கல்லூரி, தொழிற்கூடம், வியாபாரம் எனும் அமைப்புகள் மூலம் நடைபெறுகிறது.
2. ஒரு மேலாளருக்கு அமைப்பு பற்றி அறிவானது அவர் பணிகளை திறம்பட செயல்படுத்த உதவுகிறது.
3. அமைப்பு திருப்தியளிக்கும்வகையில் இருக்க வேண்டும். அது சரியாக அமையவில்லை என்றால் ஏமாற்றத்தை அளிக்கக் கூடும்.

எனவே அமைப்பு பற்றி அறிவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

**பகுதி ஈ**

**1.அமைப்பின் கோட்பாடுகளை சுருக்கமாக விவரிக்க**

ஒரு அமைப்பின் நோக்கத்தை சிறந்த முறையில் நிறைவேற்ற ஒரு வலுவான, திறன்மிகுந்த நிர்வாக அமைப்பு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

_அமைப்பின் கோட்பாடுகள் பின்வருமாறு_

**1. நோக்கங்களின் ஒருமை :**

- ஒரு அமைப்பின் நோக்கம் என்பது இலக்கினை அடைய கூடியதாக இருக்க வேண்டும்
- அதன் குறிக்கோள்களைத் தெளிவாக முடிவு செய்வதோடு, அது நிறைவேற்றக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

**2. வேலைப்பகிர்வு :**

- அமைப்பின் முழுப்பணி சுமையையும் பகிர்வு செய்தல் வேண்டும். அதற்கு துறைப்படுத்துதல் எனப்படும்
- அமைப்பின் மொத்த பணிச் சுமையை உணர அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் வேண்டும்.

**3. கட்டுப்பாட்டு வீச்செல்லை**

- ஒரு மேலாண்மையர் தனக்கு கீழ் எத்தனை பணியாளர்களை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை இது குறிக்கும்.
- தனக்கு கீழ் பணியாற்றக் கூடிய பணியாளர்கள் அதிக அளவில் இருப்பதால் அவரால் சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது. எனவே நியாயமான எண்ணிக்கையில் இது இருக்க வேண்டும்.

**4. தரவரிசைக் கோட்பாடு**

- உயர்மட்டத்திலுள்ள அதிகாரியிடமிருந்தும் கீழ் மட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் வரை ஆணையுரிமையின் வரிசை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும்.
  இதற்கு "கட்டளை இணைப்பு" எனப்பெயர்.
- உயர்அலுவலர் கீழ் பணியாளருக்கு ஆணையுரிமை வழங்குகிறார். கீழ்பணியாளர் அப்பணியினை செய்து முடிக்கும் பொறுப்பை ஏற்கிறார்.

**5. கட்டளையொருமை**

- ஒவ்வொரு பணியாளரும் ஒரு உயர் அதிகாரியிடமிருந்து ஆணைகளை பெற வேண்டும்.
- ஒரு பணியாளர் இரு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது குழப்பத்தையும், ஒழுங்கின்மையயும் ஏற்படுத்தும்.

**6. பணிவழி வரைவிலக்கணம்**

- ஒரு பணியாளரின் ஆணையுரிமையும், பொறுப்பையும் தெளிவாக முடிவு செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு பணிகளுக்கிடையே உள்ள தொடர்புகளை தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**7. ஒருமுனை இயக்கம்**

- தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய குழு நடவடிக்கைகளை திட்டமிடுதல் வேண்டும்.
- அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கினைத்து பணிகளை நிறைவேற்ற இது மிகவும் அவசியமாகிறது.

**8. ஒருங்கிணைத்தல்**

- அமைப்பின் இலக்கினை அடைய, அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.
- ஒவ்வொரு துறையின் பணிகளும் மற்ற துறையின் பணிகளுடன் கலந்து ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

(எ.கா) ஒரு பண்டகசாலையில் இலாபம் பெற வேண்டும் என்றால் அதன் கொள்முதல் மற்றும் விற்பனை துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**9. அதிகார ஒப்படைவு**

- ஓர் உயர்அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளாருக்குப் பணிகளை ஒப்படைத்து, அதற்கு தேவையான அதிகாரங்களையும், ஆணை உரிமையும் வழங்குகிறார்.
- எனவே கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.

**10. பொறுப்புக் கோட்பாடு**

- ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார்.
- அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார்.

**11. நெகிழ்வுத் தன்மை**

- ஒரு அமைப்பு மாற்றியமைக்கக் கூடிய வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் இருக்க வேண்டும்.
- மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.
- அதுசீர் குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

**12. திறமை**

- திறமையே எந்த ஒரு நிறுவனத்திற்கும் மந்திரச் சொல்லாக இருக்க வேண்டும்.
- குறிக்கோள்களை அடைய திறமையான முறையில் குறைந்த செலவில் பணிகளை நிறைவேற்றும் வகையில் ஓர் அமைப்பு இருக்க வேண்டும்.

**13. தனித்திறமை**

- தனிநபர் திறமை வெளிப்படுத்த பணியாளர்கள் தேர்வு, இடஅமர்வு, பயிற்சி மிக அவசியமாகிறது.
- எனவே மனிதவள மேம்பாட்டினை உயர்ந்த அளவில் பயன்படுத்தி ஓர் அமைப்பு வளர்ச்சித் திட்டங்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

**14. எளிமை**

- அதிகாரம் மற்றும் ஆணையுரிமைப் படிநிலை மட்டங்கள் எளிமையாக இருக்க வேண்டும்.
- இவை மிகுந்திருப்பின் செய்தித் தொடர்புகள் சிக்கலாகும். அதோடு குழப்பமும், மோதலும் ஏற்பட்டு ஒருங்கிணைப்பு ஏற்படாமல் போகும்.

**2. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக**

**தொழில் அமைப்பின் வடிவங்கள்**

**1. தனிவணிக நிறுவனங்கள்**

- தனிநபரால் உருவாக்கப்பட்டு மேலாண்மை செய்யும் வணிக அமைப்பு
- தாமே முதலீட்டு மேலாண்மை செய்து கட்டுப்படுத்தப்படும் வியாபார அமைப்பு
- தனிவணிகரே அனைத்து பணிகளையும் செய்கிறார்.
- தொழிலில் ஏற்படும் இலாபம் முழுவதும் அவரையே சேரும். அதுபோல் நட்டம் முழுவதும் அவரே ஏற்கவேண்டும்
- தொடங்குவது எளிது. சட்டச்சடங்குகள் ஏதும் இல்லை.

**2. இந்து கூட்டுக்குடும்ப வணிகம்**

- இந்து குடும்ப வணிகத்தில் ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள் உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்கள் சொத்துகள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும்.
- குடும்பத் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். தலைமை உறுப்பினரால் குடும்ப வணிகம் நடத்தப்படுகிறது.
- விவசாயம், கைத்தொழில்கள், சிறு தொழிற்சாலை போன்ற தொழில்களில் ஈடுபடுவார்கள்.
- இந்து வாரிசு சட்டம் 1956 ஒரு கூட்டு உரிமையர் மரணம் அடைந்த பின் அவரின் வாரிசுதாரர்கள் சொத்தின் உரிமையுள்ளவராகிறார்கள்.
- 1985ஆம் ஆண்டிலிருந்து இச்சட்டம் மகனைப் போலவே மகளுக்கும் சம உரிமை வழங்கி வருகிறது.

**தாயபாகா சட்டம்** - அஸ்ஸாம் மற்றும் மெற்கு வங்காளத்தில் பயன்படுத்தப்படுகிறது.
**மிட்டக்சரா சட்டம்** - இந்தியாவின் பிற பகுதிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3. கூட்டாண்மை**

- இருவரே அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களோ ஒப்பந்தத்தின் மூலம் தேவையான முதலீட்டு, திறமையும் அளித்து ஒப்புக் கொண்ட விகிதத்தின் படி இலாப நட்டம் பகிர்ந்து தொழிலை நடத்தும் அமைப்பு
- குறைந்த பட்சம் இருவர்
- அதிகபட்சம் வங்கி தொழிலுக்கு 10 நபர்கள்
- பிறதொழில்களுக்கு 20 நபர்கள்
- ஒவ்வொரு கூட்டாளியும் வியாபார மேலாண்மையில் பங்கு கொள்ளும் உரிமையும், கருத்துக் கூறும் உரிமையும் உண்டு.

**4. கூட்டுப்பங்கு நிறுமம்**

- நிறுமம் என்பது பல நபர்களின் சங்கமாகும். இது சட்டத்தால் கூட்டுருவாக்கப்பட்டு தனிநபர் தன்மையும், பொது முத்திரையும் நிலைப்பேற்று தொடர்ச்சியும் பெற்ற அமைப்பாகும்.
- நிறுமம் தன் பெயரிலேயே ஒப்பந்தங்களில் ஈடுபடலாம்.
- பங்குநரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
- பங்குகளை எளிதாக மாற்றித்தர இயலும்
- நிறுமத்தின் மேலாண்மை இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**5. கூட்டுறவுச் சங்கம்**

- பொதுவான பொருளாதார நலன் கருதி தாமாக ஒன்று சேர்ந்து அமைத்துக்கொள்ளும் சங்கமாகும்.
- இதன் நோக்கம் சேவை செய்தல் முதன்மைப்பணி. இலாபம் ஈட்டுவது இரண்டாவது பணி.
- ஒருநபர் எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும் அவருக்கு ஒருவருக்கு மட்டுமே உண்டு. ஒருநபர் - ஒருவர்க்கு எள்பது இதன் மிகமுக்கிய கோட்பாடாகும்.
- இதில் பொதுவாக ரொக்க அடிப்படையில் மட்டுமே வியாபராம் நடைபெறும்.
- கூட்டுறவு அமைப்பு பதிவு செய்தவுடன் கூட்டுருவாக்கம்பெறுகிறது. இவ்வமைப்பு குடியாட்சி அமைப்பின் கோட்பாட்டின்படி நிர்வகிக்கப்படுகிறது.
- அரசு இதற்கு முத்திரைத்தாள் வரி, பதிவு கட்டணங்கள், வருமான வரி இவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டிலுக்கிறது.

**6. பன்னாட்டு நிறுமங்கள்:**

- பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரம் நடத்தி மேலாண்மை செய்து வருவதாகும்.
- சிறப்பியல்புகள்
    1. ஒரே நேரத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்
    2. மிகப்பெரிய அளிவில் செயல்படும்
    3. பிறநாடுகளில் உள்ள கச்சாப்பொருட்கள், பணியாளர்கள், சந்தையை பயன்படுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவுகளை குறைக்க முற்படும்.

| | | |
|---|---|---|
| (எ.கா) | யூனிலீவர் லிமிடெட் | - பிரிட்டிஷ் நிறுமம் |
| | யூனியன் கார்பைடு | - அமெரிக்கா நிறுமம் |
| | பிலிப்ஸ் | - டச்சு நிறுமம் |
| | கோகோ கோகோ கழகம் | - அமெரிக்கா நிறுமம் |

அரசு நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சேவை செய்ய அரசாங்கத்தினால் நடத்தப்படும் நிறுவனங்கள்

**1. துறைமுறை அமைப்பு**

- இது அரசின் ஒரு பகுதியாக செயல்படுகிறது. அந்தந்த அமைச்சகத்தின் நிர்வாக அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது.
- இது பொதுத்துறை அமைப்பில் மிகவும் பழைமையானதாகும்.

(எ.கா) இரயில் போக்குவரத்து, தொலைபேசி, அணுசக்தி அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி.

**2) பொதுக் கூட்டுரு**

- பாராளுமன்றத்தில் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் அமைப்பு
- இது சட்டமுறைக் கழகம் என்றும் பெயர்
- இது அரசின் நிதியுதவியுடன் மேலாண்மையில் சுயாட்சித்தன்மை கொண்டதாகும்.
- இதன் மேலாண்மை அரசால் நியமிக்கப்படும் இயக்குநர்குழுவால் நிர்வாகம் செய்யப்படுகிறது.
- இதன் நோக்கம் பொதுமக்களுக்குச் சேவை செய்தல்.

(எ.கா) இந்திய ரிசர்வு வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுகழகம், யூனிட் டிரஸ்டு ஆப் இந்தியா, உற்பத்தி தொழில்நிதி கழகம்.

**3. அரசு நிறுமங்கள்**

- இந்திய நிறுமச்சட்டம் 1956-ன் படி உருவாக்கப்படுவது. இதன் செலுத்திய பங்கு முதலில் 51 % மத்திய அல்லது மாநில அரசுகளோ அல்லது மத்திய மாநில அரசுகளோ சேர்ந்து பெற்றிருத்தல்
- தனியார் நிறுமத்திலும் அரசு முதலீடு செய்கின்றன.
- இதன் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்லர்.
- தனியார் துறை ஏற்க அஞ்சும் தொழில்களில் அரசுநிறுமம் முதலீடு செய்கிறது.
- நலிவடைந்த தனியார் துறை நிறுவனங்களை ஏற்று நடத்தப்படுகிறது.

(எ.கா) அரசு போக்குவரத்துக்கழகம், இந்துஸ்தான் ஸ்டில் லிமிடெட், மாருதி உத்யோக், பெல்

**3) பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக**

**பொருள் :**

- பன்னாட்டு நிறுமம் எனும் சொல் இரண்டு பதங்களைக் கொண்டுள்ளது.
- பன் என்பது பல (அல்லது) அநேக என்பதை குறிக்கும்.
- நாடுகள் என்பது பல தேசங்களைக் குறிக்கும்.
- எனவே பன்னாட்டு நிறுமங்கள் என்பது பல நாடுகளின்இயங்கி வரும் நிறுமங்கள் எனப்படும்.
- இந்த நிறுமங்களுக்கு தொழிற்சாலைகளும், அலுவலகக் கிளைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருக்கும்.
- எல்லாவகையான வியாபார அமைப்பு ஒரு நாட்டு அரசின் எல்லையைத் தாண்டி சென்றால் அது பன்னாட்டு நிறுமம் எனப்படும்.
- இதை உலக அளவில் பலமிக்கவன் (அ) உலக வியாபாரம் (அ) பன்னாட்டு வியாபாரம் என அழைக்கப்படும்.

**வரைவிலக்கணம் :-**

- ஐக்கிய நாட்டுக் குழுவின் கூற்றுப்படி பன்னாட்டு நிறுமங்கள் என்பது நாட்டில் அது உருவாக்கப்பட்டதோ, அதைவிட கூடுதலாக பல நாடுகளில் அது கூட்டுருவாக்கப்படுவதாகும்.
- லைந் H ஜே கோபி அவர்கள் கூற்றுப்படி ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்.

**சிறப்பியல்புகள் :**

1) இது ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்
2) இது மிகப்பெரிய அளவில் செயல்படும்
3) இது அயல்நாடுகளில் உள்ள கச்சாப்பொருட்கள், பணியாட்கள், சந்தை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்க முற்படும்.

**பிறசெய்திகள் :**

- உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் இன்று செயல்படுகினறன.
- இதில் சரிபாதி அமெரிக்காவிலும், மீதி பிறநாடுகளிலும் காணப்படுகின்றன.
- அமெரிக்காவில் தலைமையிடமாக கொண்டுள்ள பன்னாட்டு நிறுமங்கள் அயல்நாட்டு முதலீடுகளை நேரடியாகக் கொண்டுள்ளது.
- பின்தங்கிய நாடுகளில் முதலீடுகளும் பணியிடங்களும் பன்னாட்டு நிறுமங்களால் 12 நாடுகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.
- அவைகள் பிரேசில், மெக்ஸிகோ, ஹாங்காங், சிங்கப்பூர், தென்கொரியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்றவை
- பன்னாட்டு உழைப்பாளர் சங்க அமைப்பின் கூற்றப்படி அமெரிக்காவில் 60% நிறுமங்கள் வேலைவாய்ப்பை வளரும் நாடுகளில் உருவாக்குகின்றன. ஆசிய நாடுகளில் 30 நிறுமங்களும், ஆப்பிரிக்காவில் 10% நிறுமங்களும் செயல்படுகின்றன.

- அயல்நாட்டு முதலீடுகள் வளரும் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பொருளாதார சூழ்நிலை, மலிவான பணியாளர்கள், எண்ணெய் வளங்களையும், இயற்கை வளங்களையும் பயன்படுத்த பன்னாட்டு நிறுமங்கள் உதவுகின்றன.
- எடுத்துக்காட்டுகள்
  1) யூனிலீவர் லிமிடெட் - இது ஒரு பிரிட்டிஸ் நிறுமம்
     இந்தியாவில் இந்துஸ்தான் லீவர் லிமிடெட் என்ற துணை நிறுமம் பெற்றுள்ளது.
  2) யூனியன் கார்பைடு - இது ஒரு அமெரிக்க நிறுமம்
     இந்தியா உட்பட பலநாடுகளில் துணை நிறுமங்களை பெற்றுள்ளது.
  3) IBM என்ற இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் . இது அமெரிக்க நிறுமம்.
     பலநாடுகளில் கிளைகள் உள்ளது.
  4) பிலிப்ஸ் - டச்சுநிறுமம். இந்தியாவில் பிலிப்ஸ் இந்தியா என்ற துணை நிறுமம் பெற்றுள்ளது.
  5) கோகோ கோலா கழகம் - அமெரிக்கா நிறுமம். பல நாடுகளில் உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது.

**முடிவுரை :**

- வருங்காலத்தில் பன்னாட்டு நிறுமங்களுக்குமிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது.
- மேலும் அரசின் சாதகமான கொள்கைகளும், பொருளாதார சீர்திருத்தங்களினால் இவை பயனடையப்போகின்றன.
- இந்தியாவில் அயல்நாட்டு முதலீடுகள் பெறுவதில் தடையில்லாத் தீர்வின் காரணமாக இந்தியா முன்னேற வகை செய்கிறது.

## பாடம் - 2. தனியாள் வணிகம்
## பகுதி - ஆ

**1. கூட்டுரு வாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை கூறு**

- கூட்டுருவாக்கம் பெறாத நிறுவனங்களில் உரிமையாளர்களும் தொழிலும் ஒன்றாகவே கருதப்படுகிறது.
- கூட்ருவாக்கம் பெறாத நிறுவனங்கள்

1) தனியாள் வணிகம் 2) இந்துக் கூட்டு குடும்ப வணிகம் 3) கூட்டாண்மை

**2. தனியாள் வணிக அமைப்பு என்றால் என்ன?**

- தனியாள் வணிகம் என்பது ஒரே ஒரு நபரின் முதலுடன், அவரின் அனுபவம் மற்றும் தொழில் திறனைக் கொண்டு, முழுப் பொறுப்பினையும் ஏற்று நடத்தும் வணிகம்.
- வியாபராத்தில் கிடைக்கும் இலாப நட்டம் அவரையே சாரும்.

**3. தனியாள் வணிகர் - வரைவிலக்கணம் தருக**

- " தனி நபரால், தனி நபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தளியாள் வணிகம் " என்று டா.ஒ.ஆர்.கிருஷ்ணசாமி அவர்கள் வரையறுக்கிறார்.
- தனி நபர் மூலதனத்தை முதலீடு செய்து சொந்தத்திறனையும், நுண்ணறிவையும் பயன்படுத்தி வியாபாரத்தை நிர்வகித்து இலாபம் முழுவதையும் அனுபவித்து நட்டத்திற்கு பொறுப்பேற்கும் ஒரு வியாபாரஅமைப்பே தனியாள் வணிகம் ஆகும். என தொழில் வணிககலைக் களஞ்சியம் வரைவிலக்கணம் தந்துள்ளது.

**4. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?**

- தொழில் கடன்கனை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்துக்களிலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.
- அதாவது கடனீந்தோர் உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு.

## பகுதி - ஈ

**1. தனி நபர் வணகித்தின் குணாதிசயங்கள் யாவை ?**

தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்கள் பின்வருமாறு

**1) தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும் :-**

- தனிநபர் ஒருவரே இதன் உரிமையாளர். எனவே அவரே உரிமையாளராகவும், தலைவராகவும் யாருடைய குறுக்கு இல்லாமல் சுந்திரமாக வியாபாரத்தை நடத்துகிறார்.
- அதனால் தனியாள் வணிகத்தின் உரிமையும் கட்டுப்பாடும் அவர் வசமே உள்ளது.

**2) மூலதனம் :-**

- தனியாள் வணிகத்தில் அவரே முதலீடு செய்கிறார். இம்முதல் தன் சொந்த சேமிப்பிலிருந்தோ அல்லது நண்பர்கள், உறவினர்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தோ கடனா பெற்று முதலீடு செய்யலாம்.

**3) வரையறாப்பொறுப்பு :-**

இவரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. வியாபார கடன்களுக்கு தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்திலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.

**4) இலாப நட்டம் :-**

- வியாபாரத்தில் கிடைக்கும் இலாபம் முழுவதும் தனிவணிகரையே சேரும். அவர் பிறருடன் பங்கிட்டுக் கொள்ள தேவையில்லை.
- அதுபோல நட்டம் ஏற்பட்டால் அந்த நட்டம் முழுவதையும்அவரே ஏற்க வேண்டும்.

**5) சட்டத் தனித்தும் இன்மை :-**

- தனியாள் வணிகத்தில் உரிமையாளரையும், தொழிலையும் சட்டம் ஒன்றாகக் கருதுகிறது.
- உரிமையாளரோ அவரே நிர்வாகம் செய்கிறார். கூட்டுப்பங்கு நிறுமத்தைப் போல் உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை.

**6) தனிச்சட்டம் இல்லை :-**

கூட்டாண்மை சட்டம் கூட்டாண்மைக்கும், இந்திய நிறுமங்கள் சட்டம் நிறுமத்திற்கும், இந்திய கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு சங்கங்களுக்கும் இருப்பதைப் போல தனியாள் வணிகத்திற்கு தனிச்சட்டம் ஏதுவும் இல்லை.

**7) பதிவு :-**

தனியாள் வணிகத்தை பதிவு செய்ய வேண்டியதில்லை. சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள உள்ளாட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியிடமிருந்து உரிமம் பெற வேண்டும்.

**8) வாழ்வு :-**

- நிறுமம் பொன்று இதற்கு நீடித்தவாழ்வு கிடையாது. தனியாள் வணிகரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும்.
- அவருடைய இறப்பு (அ) தொழில் திறமை இழத்தல் (அ) அவருக்கு வாரிசு இல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்கு கொண்டு வரும்.

**9) எளிமை :-**

அதை தொடங்குவதும், கலைத்தலும் மிகவும் எளிது.இவ்வணிகத்தை கலைக்க சட்ட விதிகளை பினபற்ற தேவையில்லை.

**10 உள்ளுர் வியாபாரம் :-**

இவ்வணிகம் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் மட்டுமே நடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன் சில இடங்களில் நடைபெறும்.

**11. சுய வேலைவாய்ப்பு :-**

தனிவணிகர் தனது சொந்த உழைப்பையே வியாபராத்தில் பயன்படுத்துகிறார். தேவைப்பட்டால் சில பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார் அல்லது குடும்ப உறுப்பினர்களைத் துணை கொள்வார்.

**12. குறைந்த முதல் :-**

இதைத் துவங்க மிகவும் குறைந்த முதலே போதுமானது. கூட்டுப்பங்கு நிறுமத்தை தொடங்க அதிக முதல் தேவை.

**2. தனி நபர் வணிகத்தின் நன்மைகள், குறைபாடுகளை விவரி ( அ) விவாதி**

**தனியாள் வணிகத்தின் நன்மைகள் :**

**1) எளிதான அமைப்பு :**

- தனியாள் வணிகத்தை மட்டுமே சட்ட சிக்கல்கள் ஏதுமில்லாமல் துவங்க முடியும். ஒப்பந்தம், பதிவு முதலிய இதற்கு தேவையில்லை.
- தொழில் தொடங்க ஆர்வமுடையவர் எவரும் துவங்க முடியும்.

**2) நேரடி ஊக்குவிப்பு :-**

- இதில் கிடைக்கும் இலாபம் முழுவுதும் தனிவணிகரையே சேரும். இதில் எவரும் பங்கு கேட்க முடியாது.
- இது அவர் வியாபாரத்தை விரிவு படுத்த ஒரு ஊக்குவிப்பாக அமைகிறது.

**3) நெகிழ்த் தன்மை :-**

- இது நெகிழ்வுத் தன்மை கொண்ட வணிக அமைப்பு. தான் நடத்தி வரும் வணிகத்தை மாற்ற வேண்டும் என்றால் அதிக செலவுகள் இல்லாமல் மாற்ற முடியும்.

- மேலும் உரிமையர் ஒருவரே என்பதால் சந்தை நிலவரத்திற்கேற்பவும், வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்பவும் தனது வியாபாரத்தை மாற்றிக் கொள்ளலாம்.

**4) வியாபரா இரகசியங்களைக் காத்தல் :-**

- வியாபார இரகசியங்களைக் காப்பது வியாபார வெற்றிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.
- இவ்வணிகத்தில் தனியாள் வணிகர் தன்னுடைய வியாபராமுடிவுகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. எனவே வியாபார இரகசியம் காக்கப்படுகிறது.

**5) விரைவான முடிவு :-**

- இதில் உரிமையர் ஒருவரே இருப்பதால் தொழிலில் முடிவுகள் எடுக்கும் முன் வேறு எவரையும் அவர் கலந்து ஆலோசிக்க தேவையில்லை.
- எனவே முடிவுகள் விரையாக எடுத்து அதை காலதாமம் இல்லாமல் செயல்படுத்த முடியும்.

**6) அதிக வெகுமதி :-**

- தனிவணிகர் தனது வியாபாரத்தை சரிவர கவனிக்காவிட்டால் நட்டம் ஏற்படும். இந்த நட்ட அச்சம் அவரை கடினமாக உழைக்க தூண்டுகோலாய் அமைகிறது.
- கடின உழைப்பு, பொருளாதார சிக்கனம் ஆகியவற்றால் நன்மைகள் ஏற்பட்டு அதிக இலாபம் கிடைக்கின்றது.

**7) திறன்மிகு கட்டுப்பாடு :-**

- தனிவணிகர் தொழில் நடவடிக்கைகளை நன்றாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த முடிவதால், வியாபார நடவடிக்கைகள் மீது அவர் தறமையாக தனது கட்டுப்பாட்டினை செலுத்த முடிகின்றது.
- இது கொள்முதல், விற்பனை தொடர்பான முடிவு களில் மாற்றம் எதுவும் இல்லாமல் வியாபாரத்தை தன் கட்டுப்பாட்டில் நடத்த வழி வகுக்கிறது.

**8) அதிகளவு விற்பனை :**

- தனிவணிகரே வியாபாரத்தை நிர்வகிப்பதால் தனது வாடிக்கையாளர்களையும், அவர்களின் விருப்பு வெறுப்புகளையும்,நன்கறிந்து, பொருள்களின் தரம், வடிவம் ஆகியவற்றை அவர்கள் விரும்பும் வண்ணம் வழங்குகிறார்.
- இதனால் விற்பனை அதிகரித்து வியாபராத்தில் நற்பெயர் உயருகிறது.

**9) சிக்கன மேலாண்மை :-**

- தனிவணிகர் ஒருவரே அனைத்து நடவடிக்கைகளையும் செய்வதால், ஊதியம் பெறும் மேலாளர், தொழில் நுட்ப வல்லுநர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை.
- எனவே நிர்வாகச் செலவுகள் குறைகிறது.

**10) அதிக நிதி தர மதிப்பீடு :**

- இவரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.எனவே வியாபாரக் கடன்களைத் தீர்க்க இவரின் சொந்த சொத்துகளும் (களிலிருந்தும் செலுத்த வேண்டும்) பொறுப்பு ஆவதால் இவருக்கு கடன்தர பலர்முன் வருவர்.
- அதனால் அதிக கடன் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**11) சுய வேலைவாய்ப்பு :-**

- குறைந்த அளவு முதல் தேவைப்படுவதால் இவ்வமைப்பை தொடங்க பலர் நபர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.
- மற்றவர்களிடம் அடிமைத் தொழில் செய்யாமல் சுதந்திரமாக வாழ விரும்பும் நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

**12) எளிமையான கலைப்பு :**

- இவ்வமைப்பை தொடங்குவதும் எளிது. அதுபோல கலைப்பது மிகவும் எளிது.
- தனிவணிகர் விரும்பிய போது எவ்வித சட்டமுறை சிக்கலும் இல்லாமல் இதை கலைக்கலாம்.

**குறைகள் :**

**1) அளவான முதல் :-**

- தனியாள் வணிகரின் மூலதன ஆதாரங்கள் வரையறுக்கப்பட்டது. எனவே தனிநபரிடம் உள்ள நிதி ஆதாரங்கள் வியாபாரப் பெருக்கத்திற்கு போதுமானதாக இருக்காது.
- இது தனிவணிகத்திற்கு பெரும் குறையாக உள்ளது.இதனால் இது சிறிய அளவிலேயே நடைபெறுகிறது.

**2) வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன் :-**

- தனியாள் வணிகரின் மேலாண்மை திறமைக்கு எல்லை உண்டு. வியாபார நடவடிக்கைகள் அனைத்திலும் அவர் வல்லுநராக இருக்க முடியாது.
- மேலும் தொழில் நுட்பம் தெரிந்த வல்லுநரை பணியில் அமர்த்த நிதிநிலை இடம் தராது.
- இது வியாபார வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளது.

**3) வரையறாப் பொறுப்பு :-**

- இவரின் வரையறாப் பொறுப்பு அவரின் ஆர்வத்திற்கு பாதிப்பாகவும், தொழிலில் நவீன எண்ணங்களை புகுத்துவதற்கு தடையாகவும் உள்ளது.

**4) குறுகிய வாழ்வு :-**

- தனிவணிகரை பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும்.
- அவரின் நீண்ட கால நோயோ, இறப்போ வியாபாரத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவரும்.
- மேலும் அவருக்குப்பின் அவரின் வாரிசுதாரர் திறமையுடன் வியாபாரத்தை தொடர்ந்து நடத்த இயலாது போனால் வியாபாரம் முற்றுப்பெறும்.

**5) அவசர முடிவு :-**

- தனிவணிகர் எவரையும் கலந்து முடிவெடுக்க தேவையில்லை.
- ஆனால் அவர் அவசரத்தில் எடுக்கும் முடிவு தவறாக இருக்க வாய்ப்ப உள்ளது.
- ஏனெனில் பலருடன் விவாதிக்காமல் தனி ஒருவர் எடுக்கும் முடிவு சில நேரங்களில் தவறாக அமைய வாய்ப்பு உள்ளது. இது தொழிலில் நட்டத்தை ஏற்படுத்தும்.

**6) சிறப்புத் தேர்ச்சியின்மை :-**

கொள்முதல், விற்பனை, நிதி, கணக்குப்பதிவியல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் தனிவணிகரே செய்வதால், ஒருவர் எவ்வளவு திறமை உள்ளவராக இருந்தாலும் அனைத்து பணிகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராக இருக்க முடியாது.

**7) குறைந்த அளவு வியாபாரம் :-**

- தனியாள் வணிகத்தில் முதலும் திறமையும் குறைவாக இருப்பதால், இது சிறிய அளவிலேயே அமைகிறது.
- இதனால் பேரளவு உற்பத்தியில் ஈடுபட இயலாது.

**8) கலந்து ஆலோசிக்க இயலாமை :-**

- தனிவணிகர் முடிவு எடுக்கும்போது குடும்ப உறுப்பினர்களை தவிர, பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கிறார்.
- அவர் எடுக்கும் முடிவு தவறாகி விட்டால், பெரும் நட்டம் ஏற்பட்டு தொழில் முடிவடையும்.

**9) நிலையற்ற தன்மை :-**

- தனிவணிகரின் வியாபாரம் நுகர்வோரின் விருப்பு வெறுப்பு மற்றும் தொழில் நுட்ப மாற்றம் ஆகியவற்றை பொறுத்தே அமையும்.
- அவர் நவீன வளர்ச்சிக் கேற்றவாறு தனது அனுகுமுறையை மாற்றாவிட்டால் பல சிரமங்களை சந்திக்க நேரிடும்.

**10) முழு நட்ட அபாயம் :-**

- தனிவணிகர் ஒருவரே இருப்பதால் தொழிலில்ஏற்படும் நட்டம் முழுவதையும் அவரே ஏற்க வேண்டும்.
- இது மிகப் பெரும் குறையாக உள்ளது.

**3) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விளக்குக.**

நுகர்வோருக்குத் தேவையான சரக்குகள், சேவைகள் செய்வதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, சமுதாய நலன்கருதி காப்பதில் பொறுப்பும் ஏற்கிறார்.

தனிவணிகர்கள் சமுதாயத்திற்கு தங்கள் பங்களிப்பை பின்வருமாறு வழங்குகின்றனர்.

**1) வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு :**

- குறைந்த கல்வி அறிவு உடையவருக்கும் கல்வி அறிவு இல்லாதவருக்கும் தனியாள் வணிகம் வேலையவாய்ப்பு அளிக்கிறது.
- இதனால் வேலையில்லாதத் திண்டாட்டம் நீங்குகிறது. இதற்கு தனிவணிகம் பெரும் பங்கு வகிக்கிறது.

**2) முதலீட்டிற்கான வாய்ப்பு :-**

சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தனிவணிகத்தை தொடங்க முடியும். அதன்மூலம் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுத்த முடிகிறது.

**3) குறைந்த விலையில் பொருட்களை அளித்தல் :**

நிர்வாகச் செலவு குறைவாக உள்ளதால் பொருட்களை குறைவான விலைக்கு தனிவணிகர் விற்பனை செய்கிறார்.

**4) சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல் :**

தனிவணிகர் உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து பெரும்பாண்மை பொருட்கள் வாங்கி விற்பனை செய்வதால், அவர்கள் பயன் பெறுகிறார்கள்.

**5) தரமான பொருட்களை அளித்தல் :-**

- தனி வணிகர் தன்னுடைய வியாபார நற்பெயரைக் காக்க தரமான பொருட்களையே விற்பனை செய்கிறார்.

- விற்ற பொருளில் ஏதேனும் குறை இருந்தால் அதை திரும்ப பெருவதன் மூலம் தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறார்.

**6) தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகள் :-**

தனியாள் வணிகர் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு பள்ளிகளுக்கு தேவையான வசதிகளை செய்தல், கண்பரிசோதனை முகாம்கள் நடத்துதல், சாலை மற்றும் பூங்காக்களை பராமரித்தல் போன்ற சமுதாய தொண்டினை செய்கிறார்கள்.

**7) வருமானம் மற்றும் வளங்களை சமமாகப் பகிர்ந்தளித்தல் :-**

வியாபார உலகில் தனியாள் வணிகர்கள் பலர் ஈடுபட வாய்ப்பளிப்பதால் வருமானமும், வளங்களும் சமமாகப் பகிர்ந்தளிக்க உதவுகிறது.

**8) நுகர்வோருக்கு உதவுதல் :**

இன்றைய நாளில் நுகர்வோர் வீட்டிற்கே பொருள்களை தனிவணிகர்கள் கொண்டு செல்கிறார்கள். இதனால் நுகர்வோரின் நேரமும் உழைப்பும் மிச்சமாகின்றன.

**4. தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது. விவரி**

உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்றும் சிறு தொழிலாக இருந்தால் மட்டுமே ஒருவர் அவ்வியாபரா நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்ய முடியும் என்று வில்லியம் பேசும் அவர்கள்கூறுகிறார்.

**1) தனிநபர் கட்டுப்பாட்டுக்கு சாதகமானவைகள் :-**

1) எளிதாகவும், விரைவாகவும் அமைத்தல்
2) நேரடிக் கட்டுப்பாடு
3) முயற்சிக்கும், பலனுக்கும் நேரடி தொடர்பு
4) வியாபார இரகசியங்களைக் காத்தல்
5) நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்பு
6) இலாபம் முழுவதையும் அனுபவித்தல்
7) சிக்கன மேலாண்மை
8) சட்ட சிக்கல் இல்லை
9) பணியாளரிடம் நேரடித் தொடர்பு
10) சமுதாய விருப்பம்

**2) தனிநபர் கட்டுப்பாட்டின் குறைபாடுகள் :**

1) அளவான முதல்
2) மேலாண்மை திறமைக்கு எல்லை
3) வரையறாப் பொறுப்பு
4) பேரளவு தொழிலுக்கு பொருந்தாமை
5) இடர்பாடுள்ள முடிவுகள் (அ) தவறான முடிவுகளால் இடர்பாடு ஏற்படுதல்
6) நிலையற்ற தன்மை

வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனிநபர் ஒருவரால் மட்டும் மேற்கொள்ளமுடியாது. இது எப்போதும் ஆபத்தானது என்று தனிவணிகர் நினைக்கிறார். மேலும் அவருக்கு உண்மையிலேயே எது தெரியாது என்பது அவருக்குத் தெரியும் என்று வில்லியம் பேசட் அவர்கள் கூறுகிறார்.

தனிநபர் ஒருவரால் வியாபார நடவடிக்கைகளால் அனைத்தும் திறமையாக மேற் கோள்ள முடியும் என்றால் தனிநபர் கட்டுப்பாடே இலாபத்தின் அடிப்படையிலும், திறமையின் அடிப்படையிலும் சிறந்தது.

## பாடம் - 3 கூட்டாண்மைத் தொழில்

**1. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக**

இந்திய கூட்டாண்மை சட்டப்படி கூட்டாண்மை என்பது "அனைவரும் சேர்ந்தோ அல்லது அனைவரக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டவர்கள் இடையே நிலவும் உறவு " ஆகும்.

**2. கூட்டாண்மையில் (அ) கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்த பட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்க யாது** ?

குறைந்தபட்ச நபர்களின் எண்ணிக்கை இரண்டு.

**அதிகபட்ச எண்ணிக்கை :-**

வங்கித் தொழிலுக்கு பத்து நபர்கள்

பிறத்தொழில்களுக்கு இருபது நபர்கள்.

**3. கூட்டாளிகளிடையே நிலவும் உறவு முறை யாது?**

- முகவர் மற்றும் முதல்வர் என்ற உறவு முறை உள்ளது.
- ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும், முகவராகவும் செயல்படுகிறார்கள்.
- அனைத்துக் கூட்டாளிகளுமோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளுக்கு பதிலாக யாரேனும் ஒருவரோ தொழிலை நடத்தலாம்.
- கூட்டாண்மை முகமைக் கோட்பாட்டின் விரிவாக்கம் என்று கூறப்படுகிறது.

**4. உழையா கூட்டாளி என்பவர் யார் ?**

- இவர் தொழிலில் முதலிடுவர். இவர் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை.
- இவரை உறங்கும் கூட்டாளி எனவும் அழைக்கப்படுவர்.

**5. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன ?**

- கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும்.
- அதில் ஒரு கூட்டாளின் பொறுப்பு வரையறா பொறுப்பாக இருக்க வேண்டும்
- பிற கூட்டாளிகளின் பொறுப்பு வரையறு பொறுப்பாக இருக்கும்.
- இது இந்தியாவில் இல்லை. ஐரோப்பியா மற்றும் அமெரிக்காவில் உள்ளது.

**6. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டின் காரணமாக உருவாக்கப்படுவது கூட்டாண்மை ஆகும்.
- இந்தியாவில் இந்த உடன்பாடு பேச்சளவிலோ அல்லது எழுத்து வடிவிலோ இருக்கலாம்.
- இவ்உடன்பாடு எழுத்து வடிவில் எழுதப்பட்டு கூட்டாளிகள் கையொப்பம் இடப்பட்டால் இதற்கு கூட்டாண்மை ஒப்பாவணம் என்று பெயர்.

**7. ஒரு கூட்டாண்மையின் உட்கிடை ஆணையுரிமைக்கு வரைவிலக்கணம் தருக**

- அவசர காலங்களில் கூட்டாண்மையின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு கூட்டாளி சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்படும் உரிமைக்கு உட்கிடை ஆணையுரிமை என்று பெயர்.
- அக்கூட்டாளி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கூட்டாண்மையும், கூட்டாளிகளையும் கட்டுப்படுத்தும்.

**8. கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு என்றால் என்ன?**

- கூட்டாளிகளின் பொறுப்பு கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு ஆகும்.
- கடனீந்தோர் தங்களுக்கு சேர வேண்டிய கடன்தொகைக்கு அனைத்துக் கூட்டாளிகளின் தனிச் சொத்துகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கு கூட்டுப்பொறுப்பு
- கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய கடன் தொகையை பெற ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்துக்கள் மீது வழக்குத் தொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கு தனிப்பொறுப்பு ஆகும்.

**9. இளவர் என்பவர் யார்? ஒரு இளவர் கூட்டாளியாக இருக்க முடியுமா?**

- 18 வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம். நீதி மன்றத்தால் ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயது வரை அவரை இளவராகக் கருதவேண்டும்.
- சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது. ஏனெனில் அவர் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதியில்லை.
- ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காகஅனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் மட்டுமே இளவர் ஒருவரை கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

10. **கூட்டாண்மை கலைப்பிற்கும் கூட்டாண்மநிறுவன கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?**

| **கூட்டாண்மைக் கலைப்பு** | **நிறுவனக் கலைப்பு** |
|---|---|
| 1. ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள் தங்களுக்குள்ள உறவை முறித்துக் கொள்ளுதல் | அனைத்துக் கூட்டாளிகளும் தங்களுக்குரிய தங்களுக்குள்ள உறவை முறித்து கொள்ளுதல் |

| | |
|---|---|
| 2. தொழில் முடிவுக்கு வரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம். | தொழில் முடிவுக்கு வந்து விடும் |
| 3. கலைப்பிற்குப் பிறகும் தொழில் தொடர்நது நடைபெறும் | தொழிலைத் தொடர்ந்து நடத்த இயலாது. |
| 4. இதில் நிறுவனக் கலைப்பு ஏற்படுவதில்லை. | இதில் கட்டாயமாக கூட்டாண்மை களைப்பு ஏற்படும் |

**பகுதி - இ**

**1. கூட்டாணமை நிறுவனத்தில் இளவரின் நிலைப் பற்றி விவரி**

- இளவர் என்பவர் 18 வயது பூர்த்தி அடையாதவர். பாதுகாவலர் நியமிக்கப்பட்டால் 21 வயது வரை இளவராக கருதப்படுகிறார்.
- சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர். எனவே அவர் கூட்டாளியாக முடியாது.
- ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும்.

**இளவரின் சட்ட நிலை**

**1) உரிமை வயது அடையும் முன் :-**

1) தொழிலின் சொத்திலும், இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை

2) நிறுவனக் கணக்குகளை பார்வையிட்டு, அவற்றை நகல் எடுக்கும் உரிமை

3) தொழிலின் சொத்துகள், இலாபத்தில் அவருக்கு உள்ள பங்கு அளவிற்கு மட்டும் அவருக்குப் பொறுப்பு அலுக்கும். அவரின் சொத்துகள் பொறுப்பாகாது.

**2) உரிமை வயது அடைந்தபின் :-**

1) உரிமை வயது அடைந்தபின்பு தொடர்ந்து கூட்டாளியாக இருக்க வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும்.

2) அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார்.

3) ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால், அறிவித்த நாளிலிருந்து நிறுவனக் கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்.

**2. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்ய பின் பற்றப்படும் நடைமுறைகளை விவரி**

இந்தியாவில் கூட்டாண்மை நிறுவனபதிவு கட்டாயமில்லை. எப்போழுது வேண்டுமானாலும் பதிவு செய்து கொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்து அதில் ஒவ்வொரு கூட்டாளியும் கையொப்பமிட்டு, உரிய தொகையுடன் நிறுவனப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும்.

**படிவத்தில் காணப்படும் விவரங்கள் பின்வருமாறு**

1) நிறுவனத்தின் பெயர்
2) நிறுவன தலைமை இடம்.
3) ஒவ்வொரு கூட்டாளயின் பெயரும் முகவரியும்
4) கூட்டாண்மையில் கூட்டாளிகள் சேர்ந்த நாள்
5) தொழில் தொடங்கிய நாள்
6) நிறுவனத்தின் கால வரையறை.

- உரிய படிவமும், தொகையையும் நிறுவன பதிவாளர்பெற்றுக் கொண்டு பதிவேட்டில் பதிவு செய்து கொள்வார். பின்னர் அவர் சான்றிதழை வழங்குவார். அதற்கு நிறுவன பதிவுச் சான்றிதழ் என்கிறோம்.
- மேலே சொன்ன விவரங்களில் மாற்றம் ஏற்பட்டால் நிறுவன பதிவாளரிடம் தெரிவித்து, தேவையான மாற்றங்கள் அவர் பதிவேட்டில் செய்து கொள்வார்.
- குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி பதிவேட்டிலுள்ள விவரங்களை ஆய்வு செய்து கொள்ளலாம்.

**3. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை ?**

கூட்டாண்மை பதிவு செய்யாவிட்டால், கீழ்கண்ட விளைவுகளை நிறுவனம் சந்திக்க நேரிடும்.

**அவை பின்வருமாறு :**

**1) உரிமையில் வழக்கு தொடர முடியாது:-**

- நிறுவனத்திற்கு எதிரகவோ அல்லது பிறகூட்டாளிகளுக்கு எதிராகவோ உடன்பாட்டின் கீழ் தனக்குள்ள உரிமையை நிலை நாட்ட ஒரு கூட்டாளி வழக்கு தொடரமுடியாது.

**2) மூன்றாமவர் மீது உரிமையியல் வழக்கு தொடர முடியாது:-**

- மூன்றாமவர் மீது தனக்கு சேர வேண்டிய பணத்திற்காக எந்த உரிமையியல் மன்றத்திலும் வழக்கு தொடர முடியாது.

**3. சட்ட நடவடிக்கை மேற்கொள்ள இயலாது :**

- நிறுவனத்துக்கு எதிராகவோ, கூட்டாளிகளுக்கு எதிராகவோ மூன்றாமவர் எவரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியாது.

**4. கூட்டாளிகளுக்கு எதிராக:**

- பதிவு செய்யாத நிறுவனம் தனது கூட்டாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது.

**5. எதிரிடு பெற முடியாது:-**

- பதிவு செய்யாத நிறுவனம் மூன்றாம் நபர்க்கு எதிராக ரூ.100க்கு மேல் திரும்ப பெற முடியாது.

**6. கணக்குகனைத் தீர்த்துக் கொள்ள :-**

- நிறுவனத்தைக் கலைக்கக் கோரி அல்லது கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்று பணமாக்க அல்லது கணக்குகளை தீர்த்துக் கொள்ள கூட்டாளி ஒருவர் வழக்கு தொடுக்க முடியாது.

**7. தடுக்க இயலாது :-**

- வியாபாரக் குறிகள் மற்றும் பதிப்பு உரிமைகளை பிறர் பயன்படுத்தக் கூடாது என பதிவுறா நிறுவனம் தடுக்க முடியாது.

**4. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது ?**

கூட்டாண்மை ஒப்பாவணத்தில் வழக்கமாக காணப்படும் செய்திகள் பின்வருமாறு

1) நிறுவனத்தின் பெயர்
2) தொழில் புரியும் இடம் மற்றும் ஒப்பந்த நாள்
3) கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4) தொழிலின் தன்மை
5) கூட்டாண்மையின் கால வரையறை
6) இலாப பகிர்வு விகிதம்
7) கூட்டாளிகள் வழங்கும் முதல் தொகை
8) கூட்டாளிகள் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை
9) முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி
10) உழைக்கும் கூட்டாளிக்கு வழங்கும் ஊதியம்
11) கணக்கேடுகளை பராமரித்தல் மற்றும் தணிக்கை
12) கூட்டாளிகள் நிறுவனத்திற்குக் கொடுத்த கடன் மீது வட்டி

**5. கூட்டாளிகளின் பல்வேறு வகைகளை விவரி**

**1) உழைக்கும் கூட்டாளி:-**

- இவர் முதலீடு செய்வார்.
- தொழில் மேலாண்மையில் பங்கேற்கும் கூட்டாணிக்கு உழைக்கும் அல்லது பணிபுரியும் கூட்டாளி என்று பெயர்.

**2) உறங்கும் கூட்டாளி:-**

- இவர் தொழிலுக்கு முதலிடுவர்.
- தொழில் நிர்வாகத்தில் பங்கு பெற மாட்டார்
- இவ்வகை கூட்டாளிக்கு உறங்கும் அல்லது உழையா கூட்டாளி என்று பெயர்.

**3) பெயரளவு கூட்டாளி :-**

- தொழிலில் முதலிடுவதுமில்லை.
- நிர்வாகத்தில் பங்கு பெறுவதுமில்லை.
- இலாபத்தில் பங்கு இல்லை.
- கூட்டாண்மையின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள தன் பெயரை பயன்படுத்த அனுமதிக்கிறார்.
- வியாபார கடன்களுக்கு பொறுப்பாகிறார்.

**4) இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி :-**

- இவர் இலாபத்தில் மட்டும் பங்கு கொள்வார்.
- நட்டத்தில் பங்கு கொள்ள மாட்டார்
- இவர் நிர்வாகத்தில் பங்கு பெற முடியாது
- அவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பு ஆகும்.

**5. முரண்தடைக் கூட்டாளி:-**

- இவர் உண்மையில் கூட்டாளி இல்லை.
- தன் நடத்தை மூலம் தானும் ஒரு கூட்டாளி என வெளியாரை நம்பச் செய்கிறார். அவரை நம்பி நிறுவனத்திற்கு கடன் கொடுத்தவர்களுக்கு பொறுப்பாகிறார்.

**6. உரிமைப் போலிக் கூட்டாளி :-**

- கூட்டாளி இல்லாத ஒருவர் கூட்டாளியென சொல்லப்படும்போது அவர் அதை மறுத்துரைக்க வேண்டும்.
- அவர் ஏதும் சொல்லாமல் அமைதி காத்திட்டால் அவரை நம்பி கூட்டாண்மையுடன் வியாபாரம் செய்யும் நபர்களுக்கு அவர் பொறுப்பாகிறார்.

**7. இரகசிய கூட்டாளி :-**

- இவர் வியாபார நடவடிக்கையில் பங்கேற் கலாம்.
- வெளியாட்களுக்கு இவர் கூட்டாளி என்று தெரியாது. மற்ற கூட்டாளிகளுக்குள்ள உரிமையும் பொறுப்பும் இவருக்கும் உண்டு.

**8) துணைக் கூட்டாளி :-**

- ஒரு கூட்டாளி கிடைக்கும் இலாபத்தை இன்னொரு நபர் பங்கிட்டுக் கொண்ட நபர் துணைக் கூட்டாளி என்கிறோம்.
- இவருக்கு கூட்டாண்மையில் எவ்வித உரிமையுமில்லை.
- நிறுவனக்கடன்களுக்கு இவர் பொறுப்பேற்பதுமில்லை.

**9) இளவர் கூட்டாளி :**

- 18 வயது பூர்த்தி அடையாத நபர். பாதுகாவலர் நியமிக்கப் பட்டிருந்தால் 21 வயது வளர அவர் இளவராக கருதுகிறோம்.
- சட்டப்படி ஒப்பந்தம் செய்து கொள்ள இளவருக்கு தகுதி இல்லாதவர். எனவே அவர் கூட்டாளியாக முடியாது.
- ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியும்.

பகுதி - ஈ

**1. கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகளை விவரி**

**கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு :-**

**1) உடன்பாடு :-**

- கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டின் காரணமாக கூட்டாண்மை ஏற்படுகிறது.
- இந்த உடன்பாடு எழுத்து வடிவில் அல்லது பேச்சு வடிவில் இருக்கலாம்.
- எழுத்து வடிவில் உள்ள உடன்பாடு பிறகாலத்தில் கூட்டாளிகளுக்கு இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க உதவும்.

**2) பல நபர்கள்:-**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே ஏற்படும் உறவு கூட்டாண்மை எனப்படும்.
- குறைந்த பட்சம் நபர்கள் இருவர்
- அதிகபட்ச நபர்கள் வங்கித் தொழிலுக்கு 10 நபர்கள், பிற தொழிலுக்கு 20 நபர்கள்.

**3) ஒப்பந்த உறவு :**

- கூட்டாளிகளுக்குள் ஏற்படும் ஒப்பந்தத்தின் விளைவாக கூட்டாண்மை ஏற்படுகிறது.
- இயற்கை உறவு, பரஸ்பர அன்பு மற்றும் சமூக நிலைமையிலிருந்து உருவாகுவது இல்லை.
- உடன்பாடு செய்து கொள்ள சட்டத் தகுதி உடையவர்கள் மட்டுமே கூட்டாளியாக முடியும்.

**4) சட்டத்திற்கு உட்பட்ட தொழில் :-**

- கூட்டாண்மை என்பது ஒரு தொழிலை நடத்துவதற்காக அமைக்கப்பட்டது ஆகும்.
- எந்த தொழிலாக இருந்தாலும் அது சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

- சட்டத்திற்கு புறம்பான தொழிலில் ஈடுபட்டால்அதை கூட்டாண்மையாக ஏற்றுக் கொள்ள முடியாது.

**5) இலாப பங்கு :-**

- கூட்டாண்மை நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தை ஒப்புக்கொண்ட விகிதத்தில் கூட்டாளிகள் பகிர்ந்து கொள்கிறார்கள்.
- முதலின் அடிப்படையில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்ளலாம்.
- உடன்பாடு இல்லை என்றால் சமமாக பகிர்ந்து கொள்ளலாம்.

**6) முகவை உறவு:**

- கூட்டாளிகளுக் கிடையே முகவர் மற்றும் முதல்வர் உறவு முறை உள்ளது.
- ஒவ்வொரு கூட்டாளியும் முதல்வராகவும் அதாவது உரிமையாளராகவும், அதே சமயத்தில் முகவராகவும் செயல்படுகிறார்.
- அனைத்து கூட்டாளிகளும் அல்லது அவர்களுக்கு பதிலாக யாரேனும் ஒரு கூட்டாளி தொழிலை நடத்தலாம்.
- இதற்கு முகமை கோட்பாடு என்று பெயர்.

**7) வரையறாப் பொறுப்பு :-**

- கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாத பொறுப்பாகும்.
- கூட்டாண்மையின் கடன்களை திருப்பிச் செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால்,கூட்டாளிகள் தங்கள் சொத்துக் களிலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.
- மேலும் கூட்டாளிகளின் பொறுப்பு கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு ஆகும்.

**8) உட்கிடை ஆணையுரிமை :-**

- ஒவ்வொரு கூட்டாளியும் நிறுனவத்தின் முகவராக கருதப்படுகிறார்கள்
- நல்லெண்ணத்துடன் நிறவனத்திற்காக வியாபாரநடவடிக்கைகளில் ஒரு கூட்டாளி மேற்கொண்டால், கூட்டாண்மையும், மற்ற கூட்டாளிகளையும் அந்த நடவடிக்கை கட்டுப்படுத்தும்
- இதற்கு உட்கிடை ஆணையுரிமை என்று பெயர்.

**9) உரிமையை மாற்ற இயலாமை:-**

- ஒரு கூட்டாளி தனக்குள்ள உரிமையை பிற கூட்டாளிகளின் ஒப்புதல் இல்லாமல் யாருக்கும் மாற்றித்தர முடியாது.
- ஒரு கூட்டாளி தானே முகவராக இருந்து கொண்டு, தனது உரிமையை மற்றவர்களுக்கு தன்னிச்சையாக மாற்றித் தர முடியாது.

**10) பதிவு :-**

- இந்தியாவில் கூட்டாண்மையை பதிவு செய்வது கட்டாயமில்லை.
- அது விருப்பத்திற்கு உட்பட்டது.
- எப்போது வேண்டுமானாலும் பதிவு செய்து கொள்ளலாம். கூட்டாண்மையை பதிவு செய்வதால் சில நன்மைகள் ஏற்படுவதால் பதிவு செய்வது சிறந்தது.

**2. கூட்டாண்மை நிறுவனத்தின் நிறைகள் குறைகள் யாவை ?**

**கூட்டாண்மை நிறுவனத்தின் நிறைகள் :-**

**1) அமைப்பது எளிது**

- கூட்டாண்மையை அமைப்பது எளிது.
- இதை துவக்குவதற்கு கூட்டாளிகளிடையே ஒப்பந்தம் இருந்தால் போதுமானது.
- நிறுமத்தினை அமைக்க சட்ட முறைப்படி பல ஆவணங்கள் தயார் செய்வதைப் போல் இதற்கு இல்லை.

**2) விருப்பப் பதிவு :-**

- கூட்டாண்மையை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டியதில்லை
- கூட்டாளிகளின் விருப்பத்திற்கு உட்பட்டது.

**3)அதிக வள ஆதாரங்கள் :-**

- இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் முதல் வழங்குவதால் அதிக முதல் திரட்ட வாய்ப்பு உள்ளது.
- கூட்டாளிகளின் பொறுப்பு கூட்டுத் தனிப் பொறுப்பு இருப்பதால் கடன் பெறும் திறன் அதிகமாவதால், தொழிலை பல மடங்கு விரிவு படுத்த முடியும்.

**4) மேலாண்மையின் திறமை :-**

- கூட்டாளிகளின் திறமைக்கு ஏற்ப பணிகள் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.
- இதனால் பல்வேறு பணிகளில் கூட்டாளிகள் மேற்பார்வை செய்து கட்டுப்படுத்த முடியும்.
- கூட்டாளிகளின் திறமை, தொழில் அனுபவம் ஆகியவை வியாபார வளர்ச்சிக்கு பெரும் பயனை அளிக்கும். இலாபம் அதிகரிக்கும்.

**5) நிதி தர மதிப்பீடு அதிகரித்தல் : -**

- கூட்டாளிகளின் வரையறாப் பொறுப்பினால் அதிக அளவில் கடன் பெற வாய்ப்பு உள்ளது.
- கூட்டாளிகள் அதிக பிணையங்களை அளிப்பதால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து அதிக கடன் பெற முடியும்.

**6) சிறந்த தொழில் முடிவுகள் :**

- கூட்டாளிகள் பலர் இருப்பதால் தொழில் பிரச்சனைகளை அனைவரும் கலந்து ஆலோசித்து சிறந்த முடிவினை எடுக்க முடியும்.
- ஒரு தீர்மானம் எடுக்கும் முன் அனைத்து கூட்டாளிகளும் அப்பிரச்சனைகளைப் பற்றி ஆராய்ந்து சிறந்த முடிவுகள் எடுப்பதால் அவசரத்தில் தவறான முடிவு எடுப்பது தவிர்க்கப்படுகிறது.

**7) இடர்பாட்டில் பங்கேற்பு :**

- கூட்டாண்மையில் பலர் இருப்பதால் தொழிலில் ஏற்படும் இடர்பாட்டை அனைவரும் பகிர்ந்து கொள்கிறார்கள்.
- இதனால் கூட்டாளிகள் ஏற்றுக் கொள்ளும் இடரின் அளவு குறைகின்றது.
- இது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

**8) சிறுபன்மையினரின் நலன் பாதுகாத்தல் :-**

- தொழிலில் முக்கிய முடிவுகள் அனைத்துக் கூட்டாளிகளின் ஒருமனதான உடன்பாட்டுக்குப் பின்னர் எடுக்கப்டும்.
- அதனால் சிறுபான்மைக் கூட்டாளிகளின் நலனை பெரும்பான்மைக் கூட்டாளிகளின் புறக்கணிக்க முடியாது.

**9) நெகிழ்வுத் தன்மை :-**

- கூட்டாளிகள் தாங்கள் விரும்பியபடி தொழிலின் தன்மையை தேவைக்கு ஏற்றபடி மாற்றிக் கொள்ள முடியும்.

**10) நேரடி மேற்பார்வை:-**

- கூட்டாளிகள் நிர்வாகத்தில் நேரடியாக பங்கு கொள்வதால் நிர்வாக செலவுகள் குறைகின்றது.
- பணியாளர்களிடம நேரம் தொடர்பு இருப்பதால் அவர்களை ஊக்குவித்து அதிக உற்பத்தி விற்பனைசெய்ய முடிகிறது.

**குறைபாடுகள் :-**

**1) வரையறாப் பொறுப்பு:**

- கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாத கூட்டுத் தனிப்பொறுப்பு
- கூட்டாளிதான் செய்த தவறுக்காகவும், பிற கூட்டாளிகளின் தவறான, நேர்மையற்ற செயல்களுக்காகவும் ஏற்படும் இழப்பை ஏற்க வேண்டியுள்ளது.

**2.குறைவான நிதி வளங்கள் :**

- இதில் அதிக முதல் திரட்டும் வாய்ப்பும், கடன்பெறும் திறனும் குறைவு.
- எனவே பேரளவு தொழில்களுக்கு இது பொருந்தாது.

**3) உட்கிடை ஆணையுரிமையின் தீமை:-**

- தன்னுடைய நடவடிக்கையின் மூலம் பிற கூட்டாளிகளை கட்டுப்படுத்த ஒரு கூட்டாளியால் முடியும்.
- திறமையற்ற அல்லது நேர்மையற்ற ஒரு கூட்டாளியின் செயல்களால் பிற கூட்டாளிகளுக்கு உட்கிடை ஆணையுரிமையில் தீங்கு இழக்க முடியும்.
- இதனால் பிற கூட்டாளி செய்த தவறுக்காக தனது சொத்துக்களை இழக்க வேண்டிய நிலை உள்ளது.

**4) அவநம்பிக்கை**

- கூட்டாளிகளிடையே ஏற்படும் நம்பிக்கையின்மை கூட்டாண்மை கலைப்பிற்கு ஒரு முக்கிய காரணமாகிறது.
- கூட்டாளிகளுக்கு இடையே ஏற்படும் கருத்து வேற்றுமை, தவறான கருத்து, நம்பிக்கையின்மை, சச்சரவு ஆகியவை கூட்டாண்மை கலைப்பிற்கு வழி வகுக்கின்றது.

**5) உரிமை மாற்ற தடை :-**

- ஒரு கூட்டாளி தனக்குள்ள உரிமையை பிற கூட்டாளிகளின் ஒருமித்த ஒப்புதல் இல்லாமல் எவருக்கும் மாற்றித்தர முடியாது.
- தனக்குரிய பங்கைத் திரும்பப் பெறவும் அனைத்துக் கூட்டாளிகளின் ஒப்பதல் தேவை.
- அதனால் மாற்றி தருவதிலும், திரும்ப பெறுவதிலும் இவ் ஒப்புதல் தடையாக உள்ளது.

**6) நீடித்த வாழ்வு இல்லை**

- கூட்டாளியின் விலகல், நொடிப்பு நிலை, மரணம் போன்றவை கூட்டாண்மையை முடிவுக்கு கொண்டுவரும்.

- கூட்டாளிக்கு வியாபாரத்தில் திருப்திஇன்மை, கூட்டாண்மை கலைப்புக்கு வழிவகுக்கும்
- எனவே கூட்டாண்மைக்கு நீடித்த வாழ்வு இல்லை.

**3. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகளை விவரி**

- கூட்டாண்மை உடன்பாட்டில் கூட்டாளிகளின் உரிமைகள்,கடமைகள் மற்றும் பொறுப்பகள் குறிப்பிட்டப்பட்டு இருக்கும்.
- உடன்பாட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் கூட்டாண்மை சட்டம் பின்வரும் உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு வகை செய்கிறது.
-

**1) கூட்டாளிகளின் உரிமைகள் :**

1) தொழிலை நடத்தவும், மேலாண்மை செய்யவும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமை உண்டு.
2) நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தனது கருத்தினை தெரிவிக்க உரிமையுண்டு.
3) முக்கியமுடிவுகள் எடுக்கும் முன்னர் தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும் என கேட்கும் உரிமை உண்டு.
4) நிறுவன ஏடுகளையும், கணக்குகளையும் கண்காணித்து நகலெடுக்கும் உரிமை உண்டு.
5) ஒப்புக் கொண்ட விகிதத்தில் இலாபத்தில் பங்கேற்கும் உரிமை உண்டு. ஒப்பந்தம் இல்லைஎனில் சமமாக பங்கேற்கும் உரிமை உண்டு.
6) தொழிலுக்கு வழங்கிய கடன், முன்பணத்தில் மீது 6 % வட்டி பெற உரிமை உண்டு
7) அன்றாட வியாபாரத்திற்கு தான் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமை உண்டு.
8) தொழிலுக்காக நிறுவன சொத்துக்களைப் பயன்படுத்த உரிமை உண்டு.
9) தங்களின் ஒப்புதல் இல்லாமல் புதிய கூட்டாளிகளை நிறுவனத்தில் சேர்ப்பதைத் தடுக்கும் உரிமை உண்டு.
10) நிறுனத்திலிருந்து ஓய்வு பெற உரிமை உண்டு.

**2) கூட்டாளிகளின் கடமைகள் :**

**அ) முழுமையான கடமைகள் :**

இவை கூட்டாளிகளின் உடன்பாட்டால் மாற்ற முடியாதவை.

1)கூட்டாளிகள் தங்களுடைய கடமைகளை நாணயமாகவும், கவனக்குறைவின்றியும், அனைத்து கூட்டாளிகளின் நலனுக்காக செய்ய வேண்டும்.
2) ஏனைய கூட்டாளிகளிடம் உண்மையாகவும், விசுவாசமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.
3) தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்புக்குள் செயல்பட வேண்டும்.
4) கூட்டாளிகளுக்கிடையே உடன்பாடு இல்லாதபோது நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.
5) தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளும் போதுதான் அறிந்து செய்த தவறினால் ஏற்படும் நட்டத்திற்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும்.
6) பிற கூட்டாளிகளின் ஒப்புதல்தனது பங்கினை பிறருக்கு மாற்றித் தர கூடாது
7) நிறுவன கணக்குகளை உண்மையாகவும் சரியாகவும் வைத்திருக்க வேண்டும்.
8) கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக போட்டித் தொழிலை நடத்தக் கூடாது.
9) நிறுவன சொத்துக்களை தொழிலுக்காகவும், நன்மைக்காகவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
10) கொள்முதல் மீதான கழிவு அல்லது விறபனை மீதான கழிவு போன்ற இரகசிய இலாபத்தை ஈட்டக் கூடாது.

**ஆ) வரம்புக்குட்பட்ட கடமைகள் :**

சட்டம் வழங்கியுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டுகடமைகளை தங்கள் உடன்பாட்டால் கூட்டாளிகள் மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

**4. கூட்டாண்மை நிறுவனத்தை கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி**

**1. உடன்பாட்டால் கலைப்பு:- ( பிரிவு-40)**

கூட்டாண்மை உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளிகளும் உடன்பட்டால் கூட்டாண்மை நிறுவனத்தை கலைக்கலாம்.

**2. கட்டாயக் கலைப்பு :- ( பிரிவு - 41)**

**நொடிப்பு நிலை :-**

அனைத்துக் கூட்டாளிகளும் அல்லது ஒருவரைத் தவிர அனைத்து கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தால் கட்டாயமாக கூட்டாண்மை றிறுவனம் கலைக்கப்படும்.

**சட்டத்திற்கு புறம்பான தொழில் :-**

தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் கட்டாயமாக கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும்.

**சில நிகழ்ச்சியின் போது கலைப்பு :-**

அ) ஒரு கூட்டாளியின் இறப்பு
ஆ) குறிப்பிட்ட கால கூட்டாண்மை யாயின் அக்காலம் முடிவடைந்தவுடன்.
இ) குறிப்பிட்ட தொழிலுக்காக தொடங்கப்பட்டிருப்பின் அத்தொழில் நிறைவு பெற்றவுடன்
ஈ) ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டால் கூட்டாண்மை கலைக்கப்படும்.

**4. அறிவிக்கையால் கலைப்பு :- (பிரிவு 43)**

விருப்பமுறிக் கூட்டாண்மையாக இருந்தால் ஒரு கூட்டாளி கூட்டாண்மையை கலைக்கும்படி எழுத்து மூலம் பிற கூட்டாளிகளுக்கு அறிவித்தால், கூட்டாண்மை கலைக்கப்படும்.

**5. நீதிமன்றத்தால் கலைப்பு :- ( பிரிவு - 44)**

கூட்டாளி ஒருவர் கீழ்க்காணும் காரணங்களுக்காக நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

**1) கூட்டாளியின் மனநிலை இழப்பு:-**

ஒரு கூட்டாளி பித்து நிலையை அடைந்தால் நீதிமன்றம் கலைப்பிற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம்.

**2) நிலையான திறமையின்மை : -**

கூட்டாளி ஒருவரின் திறமையாக தொழில் செய்யம் நிலையை இழந்திருந்தால் கூட்டாண்மை கலைப்பதற்கு நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம்.

**3) உடன்பாட்டை தொடர்ந்து மீறுதல் :-**

ஒரு கூட்டாளி தொடர்ந்து உடன்பாட்டை மீறிக் கொடிருந்தால், அவருடன் தொடர்ந்து நிறுவனத்தை நடத்துவது இயலாதென ஏனைய கூட்டாளிகள் கருதினால், கூட்டாண்மையை கலைக்கக் கோரி நீதி மன்றத்தை அணுகலாம்.

**4) கூட்டாளியின் ஒழுக்கக்கேடு :**

ஒரு கூட்டாளி ஒழுக்கக்கேடான குற்றத்தை செய்திருந்தால் ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மையை கலைக்கக் கோரி வழக்கு தொடுக்கலாம்.

**5) உரிமை மாற்றம்:-**

ஒரு கூட்டாளி தனக்குரிய உரிமையை பிறருக்கு மாற்றிக் கொடுத்தால், கூட்டாண்மை கலைக்க கோரி வழக்கு தொடுக்கலாம்.

**6) தொடர் நட்டம் :-**

நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தால் நீதிமன்றத்தை அணுகி கலைக்கலாம் .

**7) நீதி, நேர்மை அடிப்படை :-**

கூட்டாளிகள் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ளுவதில்லை என்றால் நீதி மன்றம் கலைத்திட ஆணையிடலாம்.

**5. கூட்டாண்மை - தனியாள் வணிகம் - ஒப்பு நோக்குக**
**கூட்டாண்மைக்கும் தனியாள் வணிகத்திற்கும் உள்ள ஒற்றுமைகள்:-**

1) இரு அமைப்புகளையும் ஏற்படுத்துவது எளிது.
2) தொழிகளை மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது இதற்கு நெகிழ்வுத் தன்மை எனப்படும்.
3) இரு அமைப்புகளுக்கும் நிறுமத்தைபோல் நீடித்த வாழ்வு இல்லை.
4) இரு அமைப்புகளின் உரிமையாளர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாத பொறுப்பு
5) இரண்டிலும் பேரளவு தொழிலுக்கு பொருந்தாது.
6) இரு அமைப்பிலும் அரசின் கட்டுப்பாடுகள் இல்லை
7) கட்டாய தணிக்கை இரு அமைப்பிலும் இல்லை.
8) வாடிக்கையாளருடன் இரு அமைப்பிலும் நேரடித் தொடர்பு கொள்ள முடியும்.
9) பணியாளர்களிடம் நெருங்கிய உறவு கொள்ள முடியும்
10) இரு இமைப்பிலும பதிவு செய்ய வேண்டியது கட்டாயம் இல்லை.

**வேறுபாடுகள் :-**

| | **கூட்டாண்மை** | **தனியாள் வணிகம்** |
|---|---|---|
| சட்டம் | இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932 உள்ளது. | தனிச்சட்டம் இல்லை |

| | | |
|---|---|---|
| உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது இரு நபர்கள் அதிக அளவு வங்கி தொழிலுக்கு 10 நபர்கள், பிற தொழிலுக்கு 20 நபர்கள் | ஒருவர் மட்டும் |
| உடன்பாடு | உடன்பாட்டால் உருவாக்கப்பட்டவை | உடன்பாடு இல்லை |
| மேலாண்மை | அனைத்து கூட்டாளிகளும் மேலாண்மையில் பங்கேற்கும் உரிமை உண்டு | தனியான் வணிகரால் மேலாண்மை செய்யப்படுகிறது. |
| பொறுப்பு | கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு | தனிநபர் மட்டும் பொறுப்பு ஏற்க வேண்டும் |
| முகமை | ஒவ்வொரு கூட்டாளியும் முகவராகவும் முதல்வராகவும் செயல்படுகிறார்கள். | முகமைக் கோட்பாடு பொருந்தாது கோட்பாடு |
| இலாபநட்டம் | ஒப்புக் கொண்ட விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்கிறார்கள். | ஒருவரே இலாபம் நட்டத்தை ஏற்க வேண்டும் |
| தொழில் இரகசியம் | பலர் இருப்பதால் தொழில் இரகசியம் காக்கப்படுவது கடினம் | தொழில் இரகசியம் காக்கப்படுகிறது. |
| வேலைப்பாடு | கூட்டாளிகள் வேலையை பகிர்ந்து கொண்டு செயல்படுகிறார்கள். | வேலைப்பகிர்வு இல்லை. |
| தொழில் முடிவுகள் | முக்கிய முடிவுகள் அனைத்து கூட்டாளிகளும் ஆலோசித்து ஒருமனதாக முடிவுகள் எடுப்பதால் காலதாமதம் ஏற்படலாம். | யாரையும் கலந்து ஆலோசனை செய்ய வேண்டியதில்லை. எனவே முடிவுகள் விரைவாக எடுப்பார். |

## பாடம் - 8 தொழில்துறையில் அரசு
## பகுதி -ஆ

**1. முன்னாளில் அரசின் கடமையாகக் கருதப்பட்டவை எவை?**

முன்னாளில் நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது மற்றும் பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பது ஆகியவையே அரசின் கடமையாகக் கருதப்பட்டது.

**2. அரசு தொழில்துறையில் நேரடியாகத் தலையிட வேண்டிய கட்டாயமென்ன?**

- தனியார் துறையினர் இலாபநோக்கோடு செயல்பட்டு, பொதுமக்களைச் சுரண்டுவது, தொழிலாளர்களின் உழைப்பை சுய நலத்திற்காக பயன்படுத்துவது பெருமளவில் நடைபெறுகிறது.
- எனவே பொதுமக்களின் நலனையும், உற்பத்தி, வணிக நடவடிக்கைகள் தங்குதடையின்றி நடைபெறவும் அரசு தொழில் துறையில் ஈடுபடுகிறது.

**3. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?**

- ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் அமைப்புகளை பொதுமக்கன் நலனுக்காக நாட்டுடைமையாக்கி அவற்றை நிருவாகம் செய்யும் பொறுப்பை மேற்கொள்கின்றது.
- இதற்கு நாட்டுடைமையாக்கம் எனப்படும்.
  ( எ.கா ) 14 மிகப்பெரும் வங்கிகளை 1969-ல் நாட்டுடைமையாக்கப்பட்டது.

**4. அரசுத் தொழில் என்பதின் வரைவிலக்கணத்தைக் கூறுக**

- A.H. ஹேன்சன் கூற்றுப்படி அரசுத் தொழில் என்பது " உற்பத்தி, விவசாயம், நிதி, வணிகம் ஆகிய தொழில்களில் அரசு சொந்தமாக ஈடுபட்டிருக்கும் தொழில்கள் ஆகும்".

- அரசுக்குச் சொந்தமாகவும், அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழில்கள் அரசுத் தொழில்களாகும்.

**5. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்?**
அரசுத்தொழிகள் இருவகையில் உருவாக்கலாம்.

1) அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து அவற்றை மேலாண்மையை மேற்கொள்ளலாம்.
2) ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில் அமைப்புகளை அரசே ஏற்று நாட்டுடைமையாக்கி அவை அரசு தொழில்களாக செயல்படும்.

**6. அரசுத் தொழில்கள் அனைத்துப் பகுதிகளிலும் சமமாக வளர்ச்சி பெற்றுத் தரும் ?**

- அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.
- ஆனால் தனியார் துறையினர் இலாபம் ஈட்டவாய்ப்பு இல்லாத மேலும் நாட்டின் பினதங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவதில்லை.
- எனவே அரசு அப்பகுதிகளில் தொழில்களை நிறுவி அனைத்துப்பகுதிகளிலும் சமமான வளர்ச்சி அடைய செய்கிறது.

**7. அரசு தொழில்களின் தகுந்த வடிவத்தத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு ?**
அரசு தொழில்களின் வவெத்தைத் தேர்ந்தெடுப்பது

1) தொழிலின் இயல்பு
2) நாட்டில் நிலவும் சூழ்நிலை
3) அந்த நாட்டு அரசின் கொள்கை ஆகியவற்றை சார்ந்து இருக்கும்.

**8) இராணுவம் சார்ந்த தொழிலுகளுக்குத் துறைமுறை அமைப்பே சிறந்ததென எதனால் கூறப்படுகிறது?**

- ஒரு நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த தொழில்கள் தனியார் வசமிருந்தால் நெருக்கடி காலங்களில் அவை அரசுக்கு ஒத்துழைக்காமல் போகலாம். மேலும் நாட்டின் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை எதிரி நாடுகளுக்குச் சொல்லக்கூடிய அபாயமும் உள்ளது.
- ஏற்கனவே பாதுகாப்பு சார்ந்த தொழில்களை அரசே ஏற்று நடத்தி வருகிறது. இதுவே இவ்வகைக்கு சாலச்சிறந்தது

**9. பொதுக்கழகத்தின் மேலாண்மைப் பற்றி குறிப்பிடுக**

- பொதுக்கழகங்கள் இயக்குநரவையில் மேலாண்மை செய்யப்படுகிறது.
- தகுதி, திறமை, அனுபவம் வாய்ந்த அலுவலர்களை இயக்குநரவையில் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**10. அரசு நிறுமம் என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தில் செலுத்தப்பட்ட பங்குகளில் பெரும் பாண்மையோ (51%) அல்லது முழுவதுமோ மத்திய அல்லது மாநில அல்லது மத்திய, மாநில அரசுகள் பெற்றிருந்தால் அது அரசு நிறுமம் ஆகும்.

அதாவது ஒரு நிறுமத்தின் பங்குமுதலில் குறைந்த பட்சம் 51% டை மைய அரசு, மாநில அரசுகள் பெற்றிருந்தால் அது அரசு நிறுமம் ஆகும்.

**பகுதி - இ**

**1. துறைவாரி அமைப்பின் இயல்புகளை விவரி**
**அரசு துறைவாரி அமைப்பின் இயல்புகள்**

1) துறைவாரி அமைப்புக்கு தேவைப்படும் நிதி முழுவதும் அரசே வழங்குகிறது.
2) அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டுள்ள நிலையில் இயங்குகின்றது.
அந்தந்தத் துறை அமைச்சர்கள் இவ்வமைப்பின் பொறுப்பை ஏற்கின்றனர்.
இதன் செயல்பாடுகள் குறித்து பாராளு மன்றம், சட்ட மன்றம் இவைகளில் பதில் சொல்லும் கடமை அந்தந்த அமைச்சகத்தைச் சார்ந்தது.
3) உயர்நிலையில் உள்ள அதிகாரிகளிடமிருந்து அமைப்பின் அனைத்து பகுதிக்கும் கீழ்நோக்கி அதிகார ஒப்படைவு செல்கிறது.
இதற்கு செங்குத்து அதிகாரம் எனப்படும்
4) இவ்வமைப்புக்கு தேவைப்படும் நிதியை ஆண்டுதோறும் அதன் வருவாய் செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகிறது.
இத்தொழில் கிடைக்கும் வருவாய் அரசையே சாரும்

5) இவ்வமைப்பில் கணக்குப்பதிவுமுறை மற்றும் தணிக்கை முறை கட்டுப்பாடுகள் அரசுதுறைகளில் பின்பற்றுவதைப் போல் இருக்கும்.

6) இது அரசின் ஒரு பகுதியாக கருதப்படுவதால், அரசுக்குரிய சட்ட விலக்கு அளிப்பை பெற்றுள்ளது.

எனவே அரசின் இசைவு இல்லாமல் இவைகளுக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது.

**2) பொதுக் கழகத்தின் இயல்புகள் யாவை ?**
**பொதுக் கழகத்தின் இயல்புகள் :-**

**1) சட்டத்தன்மை :**

இவை தனிச்சட்டத்தின் மூலம் மைய அல்லது மாநில அரசால் தோற்றுவிக்கப்படுகிறது.

**2) நீடித்த வாழ்வு :**

- இது நிறுமத்தை போல் நிலைத்தன்மையை பெற்றுள்ளது.
- தனது பொதுமுத்திரையின் மூலம் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

**3) அரசு முதலீடு :**

இதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.

**4) தன்னாட்சியுரிமை :**

- தன்னாட்சி பெற்றுள்ளதால் அன்றாட தேவைகளுக்கான நிதிக்கு அரசை இது சார்ந்திருப்பதில்லை
- பொது மக்களிடமிருந்து அல்லது அரசிடமிருந்து கடன் பெறலாம்.

**5) நிர்வாகம் :**

- இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- தகுதி திறமை, அனபவம் வாய்ந்த அதிகாரிகளை அரசு நியமிக்கின்றது.

**6) சேவை நோக்கம் :**

- இது சேவை நோக்கோடு செயல்படுகிறது.
- பொருள் அல்லது பணிகளை நியாயமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது.
- இதில் கிடைக்கும் இலாபத்தை தரத்தை உயர்த்தவும், விலையைக் குறைக்கவும் பயன்படுத்துகிறது.

**7) பணியாளர்கள் :**

- இதன் பணியாளர்கள் அரசு அலுவலர்கள் அல்ல.
- அவர்களை பணியில் அமர்த்துதல், சம்பளம் போன்ற பிற பணிகளை இக்கழகமே தீர்மானிக்கும்.

**8) உரிமை மற்றும் கடமை :**

இதை தோற்றிவித்த சட்டமே அதன் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றைத் தெளிவாக தெரிவிக்கும்.

**9) அரசு தலையீடு இல்லை :**

- இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடுவது இல்லை.
- செயல் சுதந்திரத்துடன் தனது கொள்கைகளை இது செயல்படுத்தும்

**10) பதில் சொல்லும் கடமை :**

- இக்கழகங்களில் செயல்பாடுகள் குறித்து அத்தொழில் சார்ந்த அமைச்சகம் பாராளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தில் பதில் சொல்லும் கடமை உண்டு.
- இந்திய தணிக்கைத் தலைவர் தணிக்கை செய்து ஆண்டு அறிக்கையை சமர்ப்பிப்பார்.

**3. அரசு நிறுமத்தின் இயல்புகள் :-**
**1) கூட்டுருவாக்கம் :-**

அரசு நிறுமம் இந்திய நிறுமச்சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.

**2) அரசு நிதி :**

இதற்கு தெவையான பெரும்பான்மை பங்குமுதல் அதாவது 51மூ அரசு பெற்றுள்ளது.

**3) பொதுமக்கள் பங்கேற்பு :-**

தனியார் துறையும், பொதுமக்களும் பங்கு முதல் பெற்று இதில் பங்கேற்கிறார்கள்.

**4) மேலாண்மை :**

- இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் உள்ளது.
- தகுதி, திறமை, அனுபவம் வாய்ந்தவர்களையே இயக்குநர்களாக அரசு நியமிக்கும். இதில் பல பிரிவினர்களும் இடம் பெறும் வண்ணம் அரசு நியமிக்கின்றது.

**5) தன்னாட்சியுரிமை :**

அரசு நிறுமங்கள் நிர்வாகம் மற்றும் நிதி குறித்து சுதந்திரமாக முடிவெடுத்து செயல்படும்

**6) பணியாளர்கள் :**

- அதன் பணியாளர்கள் அரசு அலுவலர் அல்ல.
- இயக்குநர்கள், மற்ற பணியாளர்களை அரசு தேர்ந்தெடுத்து அமர்த்தும்.

**7) கட்டுப்பாடு :**

அந்தந்த துறை சார்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு செயல்படுகிறது.

**8) தணிக்கையர் :**

இதன் தணிக்கையாளரை அரசே நியமிக்கும்.

**9) பதில் சொல்லும் கடமை :**

இதன் செயல்பாடுகள் குறித்த பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் பதில் சொல்லும் கடமை உண்டு.

**4. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்குமுள்ள வேறுபாடு:**

| | **பொதுத்துறை** | **தனியார் துறை** |
|---|---|---|
| 1. நோக்கம் | சேவை நோக்கம், பொருளாதார முன்னேற்றம் மக்களிடையே பொருளாதார ஏற்றத் வாழ்வை அகற்றுதல் | இலாப நோக்கம் மட்டுமே அடைதல், கொண்டுள்ளது. |
| 2. நிதி | வரையறா நிதி, கடன்பத்திரங்கள் மூலம் மக்களின் சேமிப்பைத் திரட்ட முடியும் | வரையறுத்த நிதி, மக்களின் சேமிப்பை திரட்டுவது எளிதில்லை |
| 3. பொருளாதார செறிவு | பொருளாதார விலமை செறிவடைதைத் இது தடுக்கின்றது. | இது தூண்டுகின்றது |
| 4. புறக்கணிப்பு | தனியார் துறையினரால் புறக்கணிக்கப் தொழில்களை ஏற்று நடத்துதல் | அபாயமின்னை மற்றும் பட்ட இலாபம் அதிகமுள்ள தொழில்களில் மட்டுமே ஈடுபடுகிறது |
| 5. வளங்கள் | நாட்டின் வளங்களைப் பாதுகாக்கின்றது | நாட்டின் வளங்களை தனது சுயநலத்திற்காக சுரண்டுகிறது. |
| 6. வளர்ச்சி | பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை தொடங்கி சமமான வளர்ச்சி பெறச் செய்கிறது. | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்க விரும்புவது இல்லை. |
| 7. செயல்படும் துறைகள் | இராணுவம் சார்ந்த மற்றும் அடிப்படைத் தொழில்கள் பொதுத்துறையிலுள்ளது | விவசாயம், நுகர்பொருட்கள் போன்ற துறைகள் தனியார் துறையிடம் விடப்பட்டுள்ளது. |
| 8. நலனை பாதுகாத்தல் | நுகர்வோர் நலனை காப்பதோடு, குறைந்த விலையில் தரமான பொருள்கள், பணிகளை கிடைக்கச் செய்கின்றன. | நுகர்வோரை சுரண்டுகின்றன. |
| 9. வேலைவாய்ப்பு | :வேலை வாய்ப்பை பெருளவு ஏற்படுத்தித் தருகின்றது. மேலும் பணியாளர்களின் | பணியாளர்களும் சுரண்டப்படுகிறார்கள். |

| | | |
|---|---|---|
| | நலன் காக்கப்படுகிறது. | அவர்கள் நலன் காக்கப்படுவது இல்லை |
| 10. மேலாண்மை | தொழில் கண்ணோட்டத்துடன் நிர்வாகம் செய்ய இயக்குநர்களுக்கு போதிய அனுபவம் தகுதி இருப்பது இல்லை. | தனிநபர் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் பெற்ற நபர்கள் இதை திறம்பட நடத்துகின்றனர். |

## பகுதி - ஈ

**1. அரசு தொழில்களில் நோக்கங்களை விவரி**

**அரசு தொழில்களில் நோக்கங்கள் :**

மக்கள் நலனுக்காகப் பணியாற்றுவது மற்றும் உற்பத்தி, வணிக நடவடிக்கைகள் தங்குதடையின்றி நடைபெறத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதே அதன் நோக்கமாகும்.

**1. பல்வகை உற்பத்தி செய்ய உதவுதல் :**
- இலாபம் மிகுந்த தொழில்களில் மட்டுமே தனிநபர் துறையினர் முதலீடு செய்ய விரும்புவார்கள்
- இலாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத, நாட்டுக்குத் தேவையான தொழில்களில் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்
- தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து மக்களுக்கு சேவை செய்வதற்காக அரசு தொழிலில் ஈடுபடுவது மிகவும் அவசியம்.

**2. அடிப்படைத் தொழில்கள் வளர்ச்சி :**

பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான அடிப்படைத் தொழில்களான இரும்பு, எக்கு, வேதியியல் தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பது சாலச் சிறந்தது.

**3. பேரளவு முதலீட்டு நிறுமங்கள் :**
- பேரளவு முதலீடு செய்யப்பட வேண்டடிய இரயில், கப்பல்கட்டுதல், மின்சக்தி போன்ற தொழில்கள் தனியார் துறையினரால் அளிக்க இயலாது
- மேலும் அவை உற்பத்தி தொடங்க நீண்ட காலம் பிடிக்கும். எனவே இத்துறையில் அரசே ஏற்படுத்தும்.

**4. இன்றியமையாத வசதிகளை தருதல் :**
- குடிநீர், மின்உற்பத்தி, எரிவாயு, தகவல் தொடர்பு போக்குவரத்து போன்றவை நாட்டுக்கு அன்றாடத் தேவைப்படும் மிகவும் அவசியமான தொழில்கள்
- இத்தேவைகள் மிக குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கிடவேண்டும். இவை தனியாரிடம் ஒப்படைக்க இயலாது
- எனவே அரவே இவ்வகைத் தொழில்களை ஏற்று நடத்த வேண்டும்.

**5. முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:**
- நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த துறைகள் தனியார் வசமிருந்தால் நெருக்கடியான காலங்களில் அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்புதறாமல் போவதற்கு வாய்ப்பு உள்ளது.
- எனவே நாட்டின் பாதுகாப்பு குறித்த துறைகளை அரசே ஏற்று நடத்தி வருகிறது.

**6. அனைத்துப் பகுதிகளும் சமமாக பொருளதார வளர்ச்சி பெறுதல்**
- அனைத்துப் பகுதியிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்படவேண்டும்
- ஆனால் தனியார் துறையினர் இலாபம் ஈட்டும் வாய்ப்பு இல்லாத மேலும் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை தொடங்க விரும்புவதில்லை
- எனவே அரசு அப்பகுதிகளில் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி அனைத்துப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சி அடைய செய்கிறது.

**7. இயற்கை வளங்களை தோண்டி எடுத்தல் :**
- நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்களை தோண்டி எடுக்கும் தொழில்களில் முதலீடு செய்து நட்டத்தை ஏற்றுக்கொள் தனியார் துறையினர் விரும்புவதில்லை.
- இயற்கை எரிவாயு, புது வளங்களை கண்டுபிடிப்பதற்கு பேரளவில் தொகைகளை செலவிடவேண்டும். இத்தகைய பேரளவு செலவினங்களை தனியார்துறை ஏற்ற முடியாது.
- எனவே அரசுத் துறைகளில் ஈடுபடுகிறது.

**8. பொருளாதார வலிமை செறிவடையவதை தடுத்தல்:**

- உற்பத்தியானது தனியார் துறையிடம் முழுமையாக இருந்தால், இலாபத்தை அதிகப்படுத்துவதோடு, பொதுமக்களையும், நுகர்வோரையும் சுரண்டுவார்கள்
- இதனால் பொருளாதார விலமை மேன்மேலும் தனியாரிடம் செறிவடையும்.
- அரசு தொழில்துறையில் ஈடுபடுவதன் மூலம் இச்செறிவைக் குறைப்பதோடு பொருளாதாரத்தையும் தனது கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

**9. அதிக வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துதல்**

- வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட தனியார் துறையினர் அதிக வேலை வாயப்பை உருவாக்குவதில்லை
- நாட்டிலுள்ள வளங்கள் அனைத்தும் நன்கு பயன்படுத்தினால் விரைவான பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.
- இதற்கு அரசே தொழில்களை தொற்று வித்து நடத்த வேண்டும்.

**10. அரசின் வருவாயைப் பெருக்குதல் :**

- அரசு நிறுவனங்களில் சில வணிகக் கொள்ளை அடிப்படையில் செயல்படும். அந்த நிறுவனங்களில் இலபாம் அரசயே சாரும்.
- இதனால் அரசின் நிதி மேம்படுவதோடு, இவை நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்.

**2. துறைவாரி அமைப்பின் இயல்புகள், நிறை குறைகளை விளக்குக**

- அரசுத் தொழில்களில் இவ்வடிவமைப்பு மிகவும் பழமையானது. அரசின் ஒரு பகுதியாக கருதப்படும்.
- தொடக்க காலத்தில் நிறுவப்பட்ட பெரும்பாலான நிறுவனங்கள் துறைவாரி அமைப்பை சார்ந்தவை.

(எ.கா) இரயில், அஞ்சல் தந்தி, வானொலி, தொலைக்காட்சி

**அரசு துறைவாரி அமைப்பின் இயல்புகள் :**

1. துறைவாரி அமைப்புக்கு தேவைப்படும் நிதிமுழுவதும் அரசே வழங்குகிறது.
2. அரசுக்கு முழுவுதும் கட்டுப்பட்டுள்ள நிலையில் இயங்குகிறது.
அந்தந்த துறை சார்ந்த அமைச்சர்கள் இவ்வமைப்பின் பொறுப்பை ஏற்கின்றனர்
இதன் செயல்பாடுகள் குறித்து பாராளுமன்றம், சட்ட மன்றம் இவற்றில் பதில் சொல்லும் கடமை இவ்வமைச்சர்களுக்கு உண்டு.
3. அதிகார ஒப்படைவு உயர்நிலையில் உள்ள அதிகாரிகளிடமிருந்து அமைப்பின் அனைத்துப் பகுதிக்கும் கீழ் நோக்கி செல்கிறது.
இதற்கு செங்குத்து அதிகாரம் எனப்படும்.
4. இவ்வமைப்புக்கு தேவைப்படும் நிதியை ஆண்டு தோறும் அதன் வருவாய் செலவு திட்டத்தின்மூலம் ஒதுக்கப்படுகிறது.
இத்தொழிலில் கடைக்கும் வருவாய் அரசையே சாரும்
5. இவ்வமைப்பின் கணக்குப் பதிவுமுறை மற்றும் தணிக்கை முறை கட்டுப்பாடுகள் அரசுத்துறையில் பின்பற்றுவதைப் போல் இருக்கும்.
6. இது அரசின் ஒரு பகுதியாக கருதப்படுவதால், அரசுக்குரிய சட்ட விலக்கு அளிப்பை பெற்றுள்ளது.
எனவே அரசின் இசைவு இல்லாமல் இவற்றின் மீது வழக்கு தொடக்க முடியாது

**நிறைகள் :**

**1. முழுமையான அரசுக்கட்டுப்பாடு :**

- அரசின் நேரடிக்கட்டுபாட்டின் கீழ் இவ்வமைப்பு இயங்குகின்றன.
- சம்பந்தப்பட்ட அமைச்சகத்தின் நிருவாகத்துக்கு உட்பட்டிருந்தால் அரசு இவற்றின் செயல்பாட்டை சரியான வழியில் கட்டுப்படுத்த முடிகிறது.

**2. மேலாண்மை :**

அரசு அலுவலர்கள் இவ்வமைப்பை மேலாண்மை செய்கின்றனர். அவர்கள் உண்மையாகவும் திறம்படவும் உழைப்பார்கள்.

**3. அரசுக்கு வருவாய் கிடைத்தல் :**

- வியாபார நோக்கில் செயல்படும் இந்நிறுவனங்கள் மூலம் கிடைக்கம் வருவாய் அரசைச் சாரும்
- இவ்வருவாய் சமூகப் பணிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

**4. அரசின் கொள்ளைகளை செயல்படுத்துதல் :**

இந்நிறுவனங்களில் அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் அரசு செயல்படுத்துகின்றன.

**5. தகுந்த வழிகளில் நிதியை பளன்படுத்துதல் :**

இவை கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுவதால், இவற்றிக்கு அளிக்கப்படும் நிதி முறையாக பயன்படுத்தப்படும்.

**6. குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்றது**

- பொதுச்சேவை சார்ந்த தோழில்களுக்கு இவை ஏற்றது.
- இலாப நோக்கோடு இல்லாமல், நியாயமான விலையில் மக்களுக்குத் தேவையான பணிகளை டிசய்து இவற்றின் குறிக்கோளாகும்.
- உற்பத்தி தொடங்குவதற்கு நீண்ட காலம் பிடிக்கும் தொழில்களுக்கு இவை சிறந்ததாகும்.

**7. பதில் சொல்லும் கடமை :**

இவற்றின் செயல்பாடுகள் குறித்து பாராளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோ இது தொடர்புள்ள அமைச்சகம் பதில் சொல்லும் கடமை உண்டு.

**குறைபாடுகள் :**

**1.அரசு தலையீடு**

- இவை அரசின் கட்டுப்பாட்டில் செயல்படுவதால், அரசின் நெகிழ்வற்ற நடைமுறை, மரபுகள் தவறாது பின்பற்ற வேண்டியது அவசியம்
- எனவே செயல் சுதந்திரம் அளிக்கப்படுவதில்லை. மேலும் முடிவுகள் எடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.
- இவ்வமைப்பில் சிகப்பு நாடாவும், அதிகாரவர்க்கமும் பெருமளவில் காணப்படும்.

**2. தகுதிவாய்ந்த அலுவலர் இன்மை:**

- இவ்வமைப்பை நிர்வாகம் செய்யும் அரசு அலுவலர்கள் தொழில் நுட்பம் அல்லது வியாபார நோக்கம் இல்லாதவர்கள்.
- எனவே நுகர்வோரின் சுதந்திரத்தன்மையை கருத்தில் கொள்ளாமல் நிர்வாகம் செய்கின்றனர்.

**3. மையப்படுத்தப்பட்ட அதிகாரம்**

- தொழில் கண்ணோட்டத்தோடு செயல்படாமல் அரசு அதன் கொள்கைகளை இத்தொழிலமைப்பு செயல்படுத்துகிறது.
- இதனால் ஆட்சி மாற்றத்திற்கேற்ப தனது செயல்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

**4. தாமதமும், சிகப்பு நாடா போக்கும் :**

நெகிழ்வு தன்மையற்ற, மரபுகளை தவறாது பின்பற்ற வேண்டிய உள்ளதால், இந்நிறுவனங்கள் விரைந்து செயல்படுவதற்குத் தடையாக உள்ளது.

**5. திறமையின்மை :**

- இந்நிறுவனங்கள் பெரும்பாலும் போட்டியற்ற சூழ்நிலையில் இயங்குவதால் திறமையை அதிகப்படுத்தவோ, பொருளாதார முனைப் போடு செயல்படுவதில்லை.
- திறமை எதுவும் இதற்கு நிர்ணையக்கப்படுவதில்லை
- இரசின் ஒரு பகுதியாகக் கருதுவதால், இதன் நட்டத்தில் அதிக கவனத்தை செலுத்தவதில்லை.

**6. அரசியல் மாற்றம் :**

- அந்தந்த அமைச்சகத்தின் பொறுப்பில் இது செயல்படுவதால், இவற்றிற்கு நிலையான கொள்கைகளை கடைபிடிப்பது அரிதாக உள்ளது.
- ஆட்சி மாற்றங்கள் இவ்வமைப்பின் கொள்கை மாற்றங்களுக்கு அடிகோலுகின்றன.

**7. வரிச்சுமை :**

இவ்வமைப்பில் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் பொருட்டு அரசு பொதுமக்கள் மீது வரியை சுமத்துகிறது.

**3. பொதுக்கழகத்தின் இயல்புகளையும், நிறைகளையும், குறைகளையும் விவரி**

**தோற்றம் :**

தனிச்சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்படுவது. அரசு நியமிக்கும் அலுவலர்களைக் கொண்டு அலுவலர்களைக் கொண்டு இயக்குநரவை அமைக்கப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது.

**இயல்புகள் :**

**1. தனித்தியங்கும் சட்ட தன்மை :**

மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிச்சட்டத்தின் கீழ் தொற்றுவிக்கப் படுகிறது

**2. நீடித்த தன்மை :**

இது நிறுமத்தைப் போல் நிலைத் தன்மையை பெற்றுள்ளது

**3. அரசு முதலீடு :**

இதற்கு தேவையான முதல் முழுவதையம் அரசிடமிருந்து பெறுகிறது

**4. தன்னாட்சிரியுமை :**

தன்னாட்சி பெற்றுள்ளதால் அன்றாட தெவைகளுக்கான நிதிக்கு அரசை இது சார்ந்திருப்பதில்லை பொதுமக்களிடமிருந்து அல்லது அரசிடமிருந்து கடன் பெறலாம்.

**5. நிர்வாகம் :**

இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுதி, திறமை, அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை அரசு நியமிக்ககிறது.

**6. சேவை நோக்கம்:**

- இது சேவை நோக்கோடு செயல்படுகிறது. பொருள் அல்லது பணிகளை நியாயமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது.
- இதில் கிடைக்கும் இலாபத்தை தரம் உயர்த்தவும் விலையைக் குறைக்கவும் பயன்படுத்துகிறது.

**7. பணியாளர்கள் :**

- அதன் பணியாளர்கள் அரசு அலுவலர்கள் அல்ல.
- அவர்களின் பணியில் அமர்த்துதல், சம்பளம் போன்ற பிறப்பணிகளை இக்கழகமே தீர்மானிக்கும்.

**8. உரிமை மற்றும் கடமை :**

இதை தோற்றிவித்த சட்டமே அதன் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றைத் தெளிவாக தெரிவிக்கும்.

**9. அரசு தலையீடு இல்லை :**

- இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடுவது இல்லை.
- செயல் சுதந்திரத்துடன் தனது கொள்கைகளை இது செயல்படுத்தும்

**10. பதில் சொல்லும் கடமை :**

- இக்கழகங்களில் செயல்பாடுகள் குறித்து அத்தொழில் சார்ந்த அமைச்சகம் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் பதில் சொல்லும் கடமை உண்டு.
- இந்தியத் தணிக்கைத் தலைவர் தணிக்கை செய்து ஆண்டு அறிக்கையை சமர்ப்பிப்பார்.

**குறைபாடுகள் :**

**1. வரையறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமை**

- அதன் நடைமுறையில் செயல்பாடுகளில் அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடு செய்கின்றனர்
- இதற்கு தன்னாட்சி உரிமை ஏட்டளவில் மட்டும் உள்ளது. நடைமுறையில் இல்லை. மேலும் வரையறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமை தான் உள்ளது.

**2. மாற்றங்கள் செய்வது கடினம் :**

- மாறுபடும் பொருளாதாரச் சூழ்நிலைக்களுக்கேற்ப இவ்வமைப்பை மாற்றுவது என்பது எளிதான செயலில்லை.
- காரணம் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவதால் அச்சட்டத்தை திருத்தி அமைப்பது எளிதல்ல

**3. தவறாகப் பயன் படுத்தப்படும் உரிமை :**

இவ்வமைப்பின் செயல்சுதந்திரத்தை பல நேரங்களில் இதன் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் தவறாகப் பயன்படுத்தி பொது நலனுக்குக் கேடு விளைவிக்கின்றனர்.

**4. திறமையின்மை :**

- இது பெரும்பாலும் போட்டியற்ற சூழ்நிலையில் செயல்படுவதால் இதன் திறமை படிப்படியாக குறையத் தொடங்குகிறது.
- இவ்வமைப்பின் நட்டத்தை இறுதியில் பொதுமக்கள் தான் ஏற்க வேண்டியுள்ளது.

**5. ஈடுபாடு இல்லாமை:**

- சம்பளம் பெறும் அலுவலர்கள் இதை மேலாண்மை செய்வதால் இதன் செயல்பாட்டிலும், வளர்ச்சியிலும் அதிக அக்கரை காட்டுவதில்லை.

- சில நிறுவனங்களில் திறமையுள்ள பணியாளர்கள் இல்லாமல் இருப்பதை காணமுடிகிறது.

**6. ஏட்டளவில் தன்னாட்சி உரிமை :**

இவை தன்னாட்சி உரிமை பெற்ற அமைப்பு என்றாலும் அதன் மீது பல கட்டுப்பாடுகளை அரசு விதிக்கிறது.

**4. அரசு நிறுமத்தின் இயல்புகள், நிறைகள், குறைகள் யாவை ?**

ஒரு நிறுமத்தின் பங்குகளில் முழுமையாகவோ அல்லது பெரும்பாண்மையாகவே குறைந்தபட்சம் $51\%$ டை மத்திய அல்லது மாநில அரசுகள் பெற்றிருந்தால் அது அரசு நிறுமம்

**அரசு நிறுமத்தின் இயல்புகள்:**

**1. கூட்டுருவாக்கம் :-**

அரசு நிறுமம் அந்திய நிறுமச் சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்டு தோற்றிவிக்கப்படுகிறது.

**2. அரசு நிதி :**

இதற்கு தேவையான பெரும்பான்மை பங்கு முதல் அதாவது $51\%$ அரசு பெற்றுள்ளது.

**3. பொதுமக்கள் பங்கேற்பு :**

தனியார் துறையும், பொது மக்களும் பங்கு முதல் பெற்று இதில் பங்கேற்கிறார்கள்.

**4. மேலாண்மை:**

இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் உள்ளது.

தகுதி, திறமை, அனுபவம் பெற்றவர்களையே இயக்குநர்களாக அரசு நியமிக்கும்.

**5. தன்னாட்சியுரிமை :**

அரசு நிறுமங்கள் நிாவாகம் மற்றும் நிதி குறித்து சுதந்திரமாக முடிவெடுத்துச் செயல்படும்

**6. பணியாளர்கள் :**

- இதன் பணியாளர்கள் அரசு அலுவலர் அல்லர்.
- இதன் இயக்குநர்களையும் மற்ற பணியாளர்களையும் அரசு தேர்ந்தெடுத்து அமர்த்தும்.

**7. கட்டுப்பாடு :**

அந்தந்த துறைசார்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு செயல்படுகிறது.

**8. தணிக்கையர் :**

இதன் தணிக்கையாளரை அரசே நியமிக்கும்

**9. பதில் சொல்லும் கடமை :**

இதன் செயல்பாடுகள் குறித்து பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் பதில் சொல்லும் கடமை உண்டு.

**நிறைகள் :**

**1. எளிதான அமைப்பு:**

இதை உருவாக்குவது அவ்வப்பொழுது தேவையான மாற்றங்களைச் செய்வது எளிது

**2. நெகிழ்வுத் தன்மை :**

- நிறுமச் சட்டத்திற்குக கட்டுப்பட்டிருப்பினும் தேவையான அளவு நெகிழ்வுத் திறன் பெற்றிருக்கிறது.
- மாறுபடும் சூழ்நிலைகளுக்கேற்ப இதன் இயக்கம் மற்றும் நிர்வாக முறையை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

**3. செயல் சுதந்திரம் :**

இதன் நிதி, நிர்வாகம் போன்றவற்றை செய்ய முழு சுதந்தரம் உள்ளது.

**4. அரசு தலையிடுவது இல்லை :**

- இதன் செயல்பாட்டில் அரசு தலையிடுவதுயில்லை
- தனியார் துறை போன்ற தொழில் கண்ணோட்டம், செயல் சுதந்திரம், நெகிழ்வுத்திறன் பெற்றிருக்கிறது.

**5. தொழில் கண்ணோட்டம்:**

- தனியார் துறையை போன்று தொழில் கண்ணோட்டத் தோடு இயங்குகின்றது.
- இது ஈட்டும் இலாபத்தை அதன் விரிவாக்கத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

**6. தொழில் நிபுணத்துவம் :**

- இது தனியார் துறையை போல் தொழில் திறமையும் அரசின் பொதுநலக் கண்ணோட்டத்தையும் ஒன்றாக பெற்றுள்ளது.
- அரசு அயல்நாட்டினரோ கூட்டாகத் தொழில் செய்வதற்கு ஏற்ற அமைப்பு

**7.ஆரோக்கியமான போட்டி :**

அரசு நிறுமம் தனியார் துறை போன்று தொழில் கண்ணோட்டம், சுதந்திரம், நெகிழ்வுத் திறன் போன்றவை பெற்றிப்பதால் தனியார் நிறுமங்களுக்கு போட்டியாக உருவாக்க முடியும்.

**குறைபாடுகள் :**

**1.அரசியல் தலையீடு :**
- இது பெற்றிப்பதாகச் சொல்லப்படும் செயல் சுதந்திரம் உண்மையிலேயே இதற்கு இல்லை.
- இயக்குறர்கள் அரசால் நியமிக்கப்படுவதால் அரசு தனது எண்ணங்களை செயல்படுத்த அதிக வாய்ப்பு உள்ளது.

**2. சிறு பான்மையினர் புறக்கணிக்கப்படுதல் :**

இவற்றிக்கு தேவையான பெரும்பகுதி தருவதால், அரசு தனது எண்ணங்களை இதன் நிர்வாகத்தின் மீது திணிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

**3. ஈடுபாடு இல்லை :**
- அரசால் நியமிக்கப்படும் அதன் உயர் அலுவலர்கள் அடிக்கடி மாற்றப்படலாம்.
- மேலும் அவர்கள் அதில் பங்கு முதல் இடுவதில்லை. எனவே அவர்கள் ஈடுபாட்டுடனும், திறமையுடனும் உழைப்பார்கள் என்று உறுதியாக கூற முடியாது.

**4. பதிலளிக்கும் பொறுப்பில் முக்கிய செய்திகள் இல்லை :-**
- இதன் ஆண்டு அறிக்கையில் நிதி குறித்த செய்திகளையே உள்ளடக்கி இருக்கும்.
- இந்த நிறுமத்தின் செயல்திறன், மேலாண்மை போன்ற செய்திகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது இல்லை

**5. தாமதம் மற்றும் முனைப்பற்ற போக்கு :**
- இவை அரசின் கொள்கைகளை செயல்படுத்த வேண்டியதாக இருக்கின்றன
- எனவே அரசுச் செயல்களுக்கே உண்டான தாமதம் முனைப்பற்ற போக்கு இவை திறமையா செயல்பாடுவதற்கு தடையாக உள்ளன.

**நிறைகள் :**

**1.அரசுநிதி :**
- மூலதனம் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது
- பொதுமக்களிடமிருந்து குறைவான வட்டிக்குக் கடன் திரட்டுகிறது.

**2. தன்னாட்சியுரிமை :**

இவை தன்னுடைய கொள்கைளையும் திட்டங்களையும் வகுத்துக் கொள்கிறது.

**3. நெகிழ்வுத் திறன்:**
- வணிக தேவைகளுக்கு ஏற்ப நெகிழ்வுத் திறனுடன் முனைப்பாற்றலுடன் இவை தொழிலை நடத்த முடியும்
- இதற்குச் செயல் சுதந்திரம் உண்டு

**4. அரசியல் தலையீடு இல்லை :**
- அரசியல் தலையீடு, அரசினால் ஏற்படும் கால தாமதம் ஆகிய குறைகளின்றி இது செயல்படுகிறது.
- செயல்பாட்டிற்கு தேவையான கொள்ளைகளை வகுக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

**5. பொதுநலன்காத்தல் :**

இதன் செயல்பாடுகள் மீது பாராளுமன்றம் அந்தந்த அமைச்சகத்தின் கண்காணிப்பு இருப்பதால் பொது நலன் காக்கப்படுகிறது.

**6. வணிகக் கொள்கை :**

இவை வணிக நோக்கோடு செயல்படுவதால், இவை ஈட்டும் இலாபத்தை தனது தொழில் வளர்ச்சி திட்டங்களுக்கும், விரிவாக்கத்திற்கும் பயன்படுத்துகிறது.

**7. பொறுப்பு :**

பாராளுமன்றம் அல்லது சட்ட மன்றத்திற்கு பதில் சொல்லும் கடமை இருப்பதால், இதன் செயல்பாடுகளில் குறைகள் ஏற்படாத வகையில் தனது செயல்திறனை அதிகரித்துக் கொள்கின்றது.

**8. சேவை நோக்கு :**
- இதன் முதன்மை நோக்கம் பொதுமக்களுக்குச் சேவை செய்வதாகும்
- நியாயமான விலையில் பொருள் மற்றும் பணிகளை வழங்குகிறது.
- பணியாளர்களுக்கு அதிக அளவு ஊதியமும், வசதிகளும் அளித்து மாதிரி பணியாண்மையராக விளங்குகிறது.

**9. நிர்வாகம்:**

இதன் இயக்குநரவையில் சமுதாயத்தின் பல பிரிவிலுள்ள அனுபவம் வாய்ந்த நபர்கள் இடம் பெறுவதால் செயல்திறன் அதிக அளவில் உள்ளது.

எனவே சமுதாய நலன் காக்கப்படுகிறது.

**பாடம் - 6. பங்கு மாற்று நிலையம்**

**பகுதி -இ**

1) முதலீட்டாளர், ஊக வணிகர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

| முதலீட்டாளர் | ஊக வணிகர் |
|---|---|
| 1. தங்களுடைய முதலீடுகளின் மீது பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார். | முதலீடுகளின் மதிப்பில் அதிகரிப்பதிலும், இலாபம் பெறுவதிலும் நோக்கமாக இருப்பார். |
| 2. முதலீட்டின் மீது கிடைக்கும் வருவாயை விரும்புவார் | வாங்கி விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தையே விரும்புவார். |
| 3. பணத்தை கொடுத்து பத்திரங்களை வாங்கி அதன் உடமையை பெறுகிறார். பணத்தைப் பெற்று பத்திரங்களை | பத்திரங்களின் உடமையை பெறுவதும் இல்லை. அதேபோல் தருவதும் இல்லை |
| 4. நீண்ட காலத்திற்கு தன்னிடம் பத்திரங்களை வைத்திருக்கிறார். | பத்திரங்களை உடனடியாக வாங்குகிறார். அதேபோல் விற்கின்றார். |
| 5. இடர்பாடு குறைவானது | இடர்பாடு அதிகமானது |
| 6. நிலையான வருமானம் | நிலையற்ற ஆதாயம் |
| 7. முதலீட்டின் மீது வருவாய் நிறுமத்தின் இலாபத்தை பொறுத்தே இருக்கும். | பங்குசந்தை விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளில் இவருடைய ஆதாயம் இருக்கும். |

**2. ஊக வணிகர்களின் வகைகளை விவரி**

**1.காளை :**

- எதிர்காலத்தில் பத்திரங்களின் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகரை காளை (அ) தொஜிவாலா என்பர்.
- இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.
- எதிர் காலத்தில் அதிக விலையில் விற்க முடியும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார்.

**2. கரடி :**

- எதிர்காலத்தில் பத்திரங்களின் விலை வீழ்ச்சி அடையும் என்று எண்ணுகின்ற ஊக வணிகரை கரடி (அ) மண்டிவாலா என்பர்
- அவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.
- பங்குகளைப் பின்னர் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் தற்போது அதை அதிக விலையில் விற்பனை செய்கிறார்.

**3. கலைமான் :**

- இவர் நிறுமத்தின் பங்குகளை புதிய விடுப்புகளில் பங்குகளை கேட்டு விண்ணப்பம் செய்து ஒதுக்கீட்டில் மூலம் பெற்றுக் கொண்டு பின்னர். அவற்றை நல்ல விலையில் விற்று விடுவார்.
- இவர் முன்னெச்சரிக்கை உடையவர்.
- இவரை முனைம வேட்டையாளர் என்றும் அழைப்பர்.

**4. முடவாத்து :**

- தற்போழுது தனது நடவடிக்கைகளில் உள்ள இடர்பாடுகளை களைவதில் போரடிக் கொண்டிருக்கின்ற கரடி ஊக வணிகரையே முடவாத்து என்பர்.
- பின்னர் குறைந்த விலையில் வாங்கி கொடுக்கும் எண்ணத்தில் தற்போது பத்திரங்களை விற்பார். குறிப்பிட்ட நாளில் பங்குகளை எந்த விலையிலும் வாங்குவதற்கு பங்குகள் கிடைக்காமல் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.

**3. போல்ட் எவ்வாறு செயல்படுகிறது, அதன் ஆற்றல்கள் யாவை?**

**செயல்பாடுகள் :**

- மும்பை பங்குச் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாட்டிற்கு போல்ட் என்று பெயர்
- தரகர்கள் தங்களின் விலைபட்டியலில், ஆணைகள் பேரங்கள், உள்வீட்டு பேரங்கள் ஆகியவற்றை தனது அலுவலகத்தில் இருந்து மத்திய வாணிக இயந்திரத்திற்கு கணிப்பொறி மூலம் அனுப்புவார்கள்.
- சிறந்த ஏலத்தொகை , சிறந்த முனைவு ஆகியவற்றை எல்லா தரகர்களின் செயல் நிலையத்திற்கு சந்தை தகவல் ஒளிபரப்பு மூலம் அனுப்பப்படும்.
- தரகர்கள் வியாபாரிகளால் கொடுக்கப்பட்டுள்ள ஆணைகளுடன் சந்தை விலையை பொறுத்திப் பார்ப்பார்கள்
- விலைகள் ஒப்பிடப்பட்டு பேரம் முடிந்தவுடன் நடவடிக்கை முடிவு பெறும்.
- நடவடிக்கை உறுதிப்பட்டவுடன் நகல் எடுத்து வைத்துக் கொள்ளலாம்.
-

**ஆற்றல்கள் :**

1. மனித செயல்பாட்டில் உள்ள செயல்திறமை இன்மையைப் போக்குகின்றன.
2. வணிகக் கொள்திறனை அதிகரிக்கின்றது
3. பொருந்திவாராத வணிகத்தை தவிர்க்கிறது.
4. நடவடிக்கைகளின் அறிவிப்பு நிலையை தாமதப்படுத்துவதில்லை.
5. மின்னியியல் மூலமாக தரகர்களின் அலுவலகத் தொகுதிகளுடன் நேரடி இணைப்பை ஏற்படுத்தி வணிக நடவடிக்கைகள் நடைபெற உதவுகின்றது
6. பங்குகளின் விலைகள், குறியீடுகள் போன்ற தகவல்களை பயன்படுத்துபவர்களுக்கு அளிக்கின்றது.
7. பங்கு மாற்றங்களுக்கு நன்கு ஆராயப்பட்ட தகவல்களை அளிக்கின்றது.

**4. பரஸ்பர நிதியகம் - விளக்குக**

- பரஸ்பர நிதி என்பது அறக்கட்டளை அல்லது கூட்டுரு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை பெற்று இதன் அறக்காப்பாளர்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு நிறுமம் மற்றும் வணிக நிறுவனங்களில் முதலீடு செய்யும் அமைப்பு ஆகும்.
- இவை சிறு முதல் முதலீட்டாளர்களின் சேமிப்பைத் திரட்டி, அதை அரசு மற்றும் நிறும பத்திரங்களில் முதலீடு செய்து வட்டி மற்றும் பங்காதாயத்தை பெறுகிறது.
- "சிறுதுளி பெருவெள்ளம்" என்ற கோட்பாட்டின்படி செயல்படுகின்றன.
- எளிய முறையில் முதலீட்டாளர்களிடமிருந்து பணம் பெறுகின்றன. நிதியின் முதல் சமமதிப்புடைய சிறு அலகுகளாக பிரிக்கப்பட்டு முதலீட்டாளர்களின் மூலதனத்திற்கு ஏற்ப அலகுகள் ஒதுக்கப்படுகின்றது.

**நன்மைகள் :**

1.சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பை ஒன்று திரட்டி அதை நிறுமங்களில் முதலீடு செய்கிறது.
2.பலதரப்பட்ட பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் இவை தங்களுக்கு ஏற்படும் இடர்களைப் பரவலாக்குகிறது. இது சிறு முதலீட்டாளர்களுக்கு இயலாது.
3.இது தான் பெறும் இலாபத்தை தமது வாழ்க்கையாளர்களுக்கு பங்காதாயமாகவும், மூலதான உயர்மதிப்பாகவும் வழங்குகிறது.
4. வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட வரிச் சலுகைகளை அளிக்கின்றது.
5. பத்திரங்களுக்கு நிரந்திர மற்றும் தொடர்ச்சியான உள்நாட்டுத் தேவையான ஏற்படுத்தித் தருகின்றன
6. பொது விடுப்புகளுக்கு சிறந்த மாற்றாக விளங்குகின்றன.

**5. பட்டியலிடுதல் என்றால் என்ன ? பட்டியலிடுதலின் பயன்கள் யாவை?**

பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே பட்டியலிடுதல் எனப்படும்.

தற்போது பட்டியலிடுதல் என்பது பொது நிறுமங்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது

**பயன்கள் அல்லது நன்மைகள் :-**

1. பட்டியலிடுவதன் மூலம் ஒரு நிறுமத்தின் மதிப்பு உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகிறது.
2. நிறுமத்தின் மீது நம்பிக்கையையும், சாதகமான எண்ணத்தையும் பொதுமக்களிடம் பெறுவதற்கு உதவுகின்றன.
3. நிறுமம் தனது சந்தை விரிவாக்கத்திற்கும் எதிர்காலத் தேவைக்கான முதலை எளிதாக பெறுவதற்கும் உதவுகின்றன.

**6. பத்திரங்களைப் பட்டியலிடுதலின் செயல்முறையை எழுதுக**

ஒரு நிறுமம் தனது பத்திரங்களைப் பட்டியலிடகுறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பிக் வேண்டும்.

**கீழ்காணும் ஆவணங்களை சான்றுகளாக இணைத்து அனுப்ப வேண்டும்.**

1. நிறுமத்தின் அமைப்புமுறையோடு , செயல்முறை விதிகள் தகவலறிக்கை, ஒப்புறுதி ஒப்பந்த, இருப்பு நிலைக்குறிப்பு போன்றவற்றின் நகல்கள்
2. முதல் அமைப்பின் விவரம்
3. பங்கு, கடனீட்டுப் பத்திரச் சான்றிதழ்களின் மாதிரி நகல்கள்
4. பங்கு விநியோகம் பற்றிய விவரங்களின் குறிப்பு
5. நிறுமம் கடந்த 10 ஆண்டுகளில் வழங்கிய பங்காதாயர் ரொக்க மேலூதிய விவரங்கள்
6. கூட்டுருவாக்கம் பெற்றதிலிந்து நிறுமத்தின் செயல்கள் பற்றிய சுருக்கமான வரலாறு

பங்கு மாற்றகம் நிறுமம் செய்த மனுவை ஆராய்ந்து அது நிறைவளிப்பதாக இருந்தால், பின்வரும் நிபந்தனைகளை நிறுமம் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. நிறுமம் வெளியிட்ட பங்குகளில் 49% பொதுமக்களுக்கு ஒதுக்கி செய்திருக்க வேண்டும்.
2. நிறுமத்தின் முதல் ரூ.25 இலட்சத்துக்கு மேல் இருக்க வேண்டும்.
3. பங்கு ஒதுக்கீடு முறையாகவும் நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் செய்திருக்க வேண்டும்.
4. பங்கு மாற்றகத்தோடு பட்டியலிடும் உடன்பாடு செய்து கொள்ள வேண்டும்.
5. சட்டத்திற்குப் புறமான நடவடிக்கைகளில் நிறுமம் ஈடுபாடுவதில்லை என்ற உறுதிமொழி தர வேண்டும்.
6. பங்கு மாற்றகத்தின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக நிறுமம் அறிவிக்க வேண்டும்.

இவற்றை பின்பற்றினால், நிறுமத்தின் பத்திரங்களில் அலுவல் பட்டியலில் சேர்க்கப்படும்.
இதுவே பட்டியலிடுதலின் செயல் முறைகள் ஆகும்.

## பாடம் 7. கூட்டுறவு அமைப்புகள்

### பகுதி - அ

**1. கூட்டுறவு வரையறு**

தாமல்கின் கூட்டுறவிற்கு பின் வருமாறு வரையறுகிறார்.

" வியாபார அமைப்பின் மூலம் நலிவடைந்தவர்கள் தங்கள் பொருளாதரா தேவையின் அடிப்படையில் ஒன்று கூடி தங்களுடைய தங்களுடைய நலிந்த தன்மையிலிருந்து விடுபட்டு பலம் பொருந்தியவர்களாக மாற்றிக் கொள்வதற்கு ஏற்பட்ட அமைப்பு "

**2. இராக்குடேல் முன்னோடிகள் என்பர் யார்?**

1844ஆம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் இராபர்ட் ஒருவன் என்பவர் முதல் முதல் கூட்டுறவு இயக்கத்தை தொடங்கினார். இதுவே முதல் நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும்.

**3. ஒரு நபர் - ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது?**

கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் மூலதனப் பங்கு எவ்வளவு பெற்றிருந்தாலும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. ஒருநபர் ஒரு வாக்கு என்பது கூட்டுறவின் தத்துவமாகும். எனவே மக்களாட்சி அடிப்படையில் மேலாண்மை அமைகிறது.

**4. தனக்குத் தானே உதவி, பரஸ்பர உதவி என்பதன் முக்கியத்துவம் யாது?**

- கூட்டுறவின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருக்காக.
- கூட்டுறவில் ஒவ்வொரு உறுப்பினரும் தனக்கு உதவி செய்து கொண்டு பிறருக்கும் உதவி செய்கின்றனர். ஒவ்வொரு உறுப்பினரும் பரஸ்பர உதவி செய்து கொள்கின்றனர்.

**5. கூட்டுறவு சங்கத்தின் நோக்கங்கள் யாவை ?**

- கூட்டுறவு சங்கத்தின் முதன்மை நோக்கம் சேவை புரிவது
- இரண்டாவது நோக்கும் இலாபம் ஈட்டுவது
- உறுப்பினர்களுக்கு கடன் வசதி அளித்து உற்பத்தியை பெருக்குதல்

**6. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகள் கூறுக**
**சிறப்பியல்புகள் :**
**1) தன்னிச்சையாகச் சேருதல் :**

- பலர் தன்னிச்சையாகச் சேர்ந்து உருவாக்கும் சங்கம்
- ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் சேரலாம் அதேபோல் விலகலாம். யாரையம் சேருமாறு கட்டாயப்படுத்துவது இல்லை.

**2) சமத்துவம் :**

இதில் உறுப்பினர்கள் அனைவரும் சமம். அதிகதாக ஒருவர் முதலீடு செய்த காரணத்தினால் அவருக்கு அதிக உரிமை கிடையாது.

**3) மக்களாட்சி மேலாண்மை :**

இதில் உறுப்பினர் ஒருவர் மூலதனப் பங்கு எவ்வளவு பெற்றிருந்தாலும் அவருக்கு ஒருவாக்கு மட்டுமெ உண்டு. உறுப்பினர்கள் பிரதிநிதிகளை ஒரு நபர் ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்ந்தெடுத்து மக்களாட்சி முறையில் மேலாண்மை அமைக்கின்றனர்.

**4) ஒன்றுபட்ட முயற்சி :**

- இதில் உறுப்பினர்கள் எல்லோரும் இணைந்து செயல்படுகின்றனர்.
- ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக என்பது கூட்டுறவின் முக்கிய கோட்பாடு ஆகும்.

**7. வேளாண்மைச் சாரா கடன் சாரா சங்கம் என்றால் என்ன?**

- இச்சங்கங்கள் நடுத்தர மற்றம் பின்தங்கிய வருவாய்யுள்ள மக்களுக்கு உதவி புரிய ஏற்பட்டவை.
- இதன் முதன்மையான நோக்கம் உறுப்பினர்களுக்கு பலவகையான சேவைகளை குறைந்த செலவில் செய்து தருவது ஆகும்.

**8. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன ?**

- கூட்டுறவு சங்கத்தின் இலாபத்தை பகிர்ந்தளிக்கின்றன.
- இலாபத்தில் பங்கு முதலுக்கு 9% மும், காப்புநிதிக்கு 25% மும் உள்ளூர் மேம்பாட்டிற்கு 10% மும் வழங்கப்பபடுகிறது.
- மீதி இலபாம் உறுப்பினர்கள் எந்தஅளவுக்கு சங்கத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனரோ அந்த அடிப்படையில் அவர்களுக்கு மேலூதியம் வழங்கப்படுகிறது.
- இதற்கு ஆதரவுப் பங்காதாயம் எனப்படும்

**பகுதி - இ**

**1. கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகள் யாவை (அல்லது) விவரி**
**கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகள்:**
**1. திறமையற்ற மேலாண்மை :**

1. இதில் உறுப்பினர்கள் மேலாண்மை செய்ய போதுமான அனுபவமும் திறமையும் இல்லாதவர்கள்
2. மேலும் திறமையுடன் மேலாண்மை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இல்லாதவர்கள்

**2. வரையமுதல் :**

- இதன் பங்குமுதல் மதிப்பு மிகவும் குறைவு.
- மேலும் ஒரு நபர் ஒருவாக்கு என்ற முறை உறுப்பினர்கள்
- இதில் அதிக முதலீடு செய்வதற்கு தடையாக உள்ளது.
- இதனால் பேரளவுத் தொழிலுக்கு தேவையான முதல் திரட்ட முடிவதில்லை.

**3. தக்க தூண்டுகோல் இல்லை :**

இலாப நோக்கு இல்லாமையும் பங்காதாயம் 9% ம், மேலாண்மையின் பொறுப்புக் குறைவதோடு, பணியாளர்கள் குறைந்த அளவு ஊதியம் பெறுவதால் அவர்கள் கடினமாக உழைப்பதில்லை.

**4. ஒற்றுமையின்மை :**

- உறுப்பினர்களிடையே சில வேலைகளில் ஒற்றுமை இருப்பதில்லை.
- இதனால் இதன் வியாபாரம் பாதிக்கின்றது.

**5. அரசியல் செல்வாக்கு :**

அரசியல் செல்வாக்கோடு சில உறுப்பினர்கள் இதனை மேலாண்மை செய்து தங்கள் சுயநலத்திற்காக இதை சுரண்டுகின்றனர்.

**6. உரிமை மாற்ற முடியாமை :**

- இதில் பங்குகளை மாற்ற முடியாது
- சங்கத்திலிருந்து விலகும் உறுப்பினர் தனது பங்கு முதல் தொகையைத் திரும்ப பெறலாம்.

**7. அதிகமான அரசு தலையீடு:**

- அரசின் சட்டத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு கூட்டுறவு அமைப்பு நடத்தப்படுகிறது.
- பதிவாளரிடம் பல அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும்.
- காலம் தாழ்த்தும் நடைமுறை, நெகிழ்வுத்தன்மை இல்லாமை, தூண்டு கோல் இல்லாதது இதன் முன்னேற்றத்தை பாதிக்கின்றது.

**8. கடன் வசதிஇல்லை:**

- நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.
- உறுப்பினர்களுக்கு கடன் வசதி அளிப்பதில்லை.

**2. கூட்டுறவு சிறப்பு அங்காடின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளைத் தருக**

**பொருள் :**

- இது பேரளவு சில்லறை வியாபார அமைப்பு கூட்டுறவு அமைப்பில் தொடங்கப்படுவது
- இதில் விற்கப்படும் பொருட்கள் விலைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரே விலை பேரம் பேச இயலாது.

**வரைவிலக்கணம் :**

சில்லறை விற்பனை செய்யும் துறைவாரி அமைப்பு நான்கு அடிப்படை துறைகளைக் கொண்டது. மளிகைப் பொருள், சுயசேவைப்பரிவு, மாமிசப் பிரிவு, பால்பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள் விற்பனை செய்யும் இடம் சலுகை அடிப்படையில் துறைகளை குத்தகைக்கு நடத்தும் இடம் என்று M.M. ஜிம்மர்மென் வரையறுக்கிறார்.

**சிறப்பியல்புகள் :**

1. பேரளவு சில்லறை விற்பனை நிலையம்.
2. பலவகையான பொருட்கள் கிடைக்குமிடம்
3. சுயசேவைப் பிரிவு, விற்பாண்மையா தேவையில்லை
4. பல துறைகளை கொண்டது.
5. ரொக்க அடிப்படையில் விற்பனை செய்யப்படும்
6. பொருட்களில் கலப்படம் தவிர்க்கப்படும்
7. சரியான அளவு, எடை குறை என்ற நிலை ஏற்படுவது இல்லை.
8. அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படும்.

**3. கூட்டுறவு அமைக்கப் பின்பற்ற வேண்டிய முறைகளை விளக்குக**

- கூட்டுறவு சட்டம் 1912ன் படி அல்லது மாநில கூட்டுறவு சட்டத்தின்படி கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய வேண்டும்.
- கூட்டுறவு சங்கத்தை தோற்றுவிக்க குறைந்தது 25 நபர்கள் வேண்டும்
- கூட்டுறவு சங்கப்பதிவாளரிடம் சங்கம் அமைக்க விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்து தருதல் வேண்டும்.
- அதில் கூட்டுறவு சங்கத்தின் பெயர், முகவரி, நோக்கம், முதல், பொறுப்பு ஆகியவை குறிப்பிட்ட வேண்டும்.
- இதற்கு அமைப்பு முறையேடு என்கிறோம்.
- விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகள் இணைக்கபட வேண்டும்.
- துணை விதிகளில் மேலாண்மை செய்யும்முறை, கூட்டம் நடைபெறும் முறைகள் குறிப்பிடப்பட வேண்டும்.
- இவற்றை பதிவாளர் முறையாகப் பரிசீலித்து அவர் இவற்றில் முழு திருப்தி ஏற்பட்ட உடன் பதிவு செய்து கூட்டுருவாக்க சான்றிதழை வழங்குவார்.
- இதை பெற்ற உடன் சங்கம் சட்ட உருப்பெற்று தனி ஆளுமையை அடைகின்றது.